# பிரதம மந்திரி கல்முனைக்குச் செல்வார்

Registered as a Newspaper in Ceylon ✦ ★ விலை சதம் 10

# ஈழநாடு

EELANADU

மலர் 9
இதழ் 339
தேசிய தினசரி

தொலைபேசி எண். 49
கோல் 389
National Tamil Daily

... தை 4 ஷவ்வால் 17 வியாழக்கிழமை (18-1-68)

## மௌலானாவிற்கு ஆதரவாக கூட்டங்களில் பேசுவார்

கல்முனை, புதன்

கல்முனை தொகுதி இடைத் தேர்தலில் தமிழரசுக்கட்சி சார்பில் போட்டியிடும் திரு. எஸ். சற். எம். மசூர் மௌலானாவை ஆதரித்துப் பல கூட்டங்களில் பேசுவதற்காக பிரதமர் டட்லி சேனநாயக்கா அடுத்த வாரம் கல்முனைக்குச் செல்கின்றார்.

தேசிய அரசாங்கத்தின் தேர்தல் பிரசார இயக்கத்திற்கு பொறுப்பாயுள்ள தொழில் வீடமைப்பு மந்திரி திரு. எம். எச் முகமது கல்முனைக்குச் சென்று தமிழரசுக்கட்சி அபேட்சகரை ஆதரித்துப் பல தேர்தல் பிரசாரக் கூட்டங்களில் சொற்பொழிவாற்றினார்.

தேசிய அரசாங்கத்தின் பங்காளியான தமிழரசுக் கட்சி அபேட்சகருக்கு ஆதரவாக பிரதமர் தேர்தல் பிரசாரம் செய்ய வருவது இதுதான் முதல் தடவையென தமிழரசு வட்டாரங்கள் தெரிவித்தன. கல்முனை தேர்தல் பிரசாரக் கூட்டங்

(8-ம் பக்கம் பார்க்க)

# யாழ். நூல்நிலைய முன்றலில் நாவலர் பெருமானுக்கு சிலை

## தமிழ் வருடப்பிறப்பன்று திறந்துவைக்க முயற்சி

## மந்திரி திருச்செல்வம் நடவடிக்கை

யாழ்ப்பாணம், வியாழன்

யாழ்ப்பாணம் பொதுஜன நூல்நிலைய முன்றலில் நாவலர் பெருமானின் உருவச் சிலையை நிறுவுவதற்கு உள்ளூர் ஆட்சிமந்திரி எம். திருச்செல்வம் விரைவில் நடவடிக்கை எடுக்கவிருப்பதாக தெரியவருகிறது.

சித்திரை வருடப்பிறப்பிற்குமுன்னர் நாவலர் சிலை அமைக்கப்பட்டு விடுமென்றும் நூல்நிலைய மண்டபத்திற்கு உள்ளே சரஸ்வதி சிலையொன்று நிறுவுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாகவும் தெரியவருகிறது. நாவலரின் பிறப்பிடமான யாழ்ப்பாணத்தில் அவருக்கு சிலை எழுப்பவேண்டுமென பல பொது ஸ்தாபனங்களும் சங்கங்களும் வற்புறுத்திவந்ததைத் தொடர்ந்தே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது. [குரு. நி]

## நிவாரணம் பற்றிய விபரம் தீவுப்பகுதியிலிருந்து வரவில்லையாம்

யாழ்ப்பாணம், வியா.

வடபகுதியில் இதுவரையில் 3 லட்சம்வரையில் வெள்ள நிவாரணநிதி வழங்கப்பட்டுள்ளது என சமூக சேவைகள் இலாகா தெரிவித்துள்ளது. மேலும் மேலதிக பணம் கிடைத்தவுடன் மிகுதியாகவுள்ள இடங்களுக்கும் வழங்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நிவாரணத்திட்டத்தின்கீழ் மாதம் 150 ரூபாவுக்குள் வருமானம் பெறுபவர்களுக்கு மட்டும் இவ்வுதவி வழங்கப்பட்டுவருகிறது. தீவுப்பகுதிகளில் இருந்து இதற்கான அறிக்கைகள் இன்னும் கிடைக்கவில்லை என்றும் தெரியவருகிறது. [ந. நி]

## கிராம தையலர்களுக்கு இலவச தையல் வகுப்பு

யாழ்ப்பாணம், வியா.

வடமாகாணத்தில் பின்தங்கிய கிராமங்களின் அபிவிருத்தித்திட்டத்தின் கீழ் கிராமப் பெண்களுக்கு இலவசமாகத் தையல் கலையைக் கற்பிப்பதற்காக ஒரு புதிய திட்டத்தைச் செயற்படுத்த கிராமமுன்னேற்றப் பகுதியினர் துரித நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர்.

இத்திட்டத்தின் கீழ் தையற் கலையைக் கற்பிப்பதற்காக தொகுதிவாரியாக 11 பேர் தெரிவு செய்யப்பட்டுள்ளார்கள். இவ்வருடம் இத்தையல் ஆசிரியர்கள் பின்தங்கிய கிராமங்களைச் சேர்ந்த பெண்களுக்கு இலவச தையற் பயிற்சிகளை அளிக்கவுள்ளனர்.

இப்புதிய திட்டத்தை இவ்வாண்டில் செயற்படுத்த வேண்டுமென கச்சேரி செயலக மண்டபத்தில் நடைபெற்ற மாவட் இணைப்புக் குழுக்கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது. [வி. நி.]

## 'மற்றுமொரு வியட்னுமாக ஈமன் 'மாறலாம்'

### சூடான் அதிபர் எச்சரிக்கை

சாஞ, ஜன. 17

ஈமனில் உள்நாட்டுப் போரை நிறுத்தி அங்கு சண்டையிடும முடியரசுவாதிகளுக்கும் குடியரசுவாதிகளுக்குமிடையே சமரசம் ஏற்படுத்த, சூடான் ஜனாதிபதி தலைமையில் முயற்சி செய்யும் மூன்று நாட்டுக் கமிட்டி தோல்வியை எதிர்நோக்குவதாக அங்கிருந்துவரும செய்திகள் கூறுகின்றன.

போரில் ஈடுபட்டுவரும் இரண்டு தரப்பினரும் தத்தம் நிலைகளிலிருந்து விட்டுக் கொடுக்க மறுத்து வருகின்றனர்.

சமரச முயற்சிகளில் ஈடுபட்டுள்ள மூன்று நாட்டுக் கமிட்டிக்குள்ளும் சில அபிப்பிராய பேதங்கள் நிலவுவதாகத் தெரிகிறது.

ஈமன், மற்றுமொரு வியட்னுமாகிவிடலாம் என்று கமிட்டியின் தலைவரும், சூடான் ஜனாதிபதியுமான யஹ்றுப் எச்சரித்துள்ளார்.

---

### ஜாரிங் — எபான் சந்திப்பு

ஜெருசலம், ஜன. 17

இஸ்ரேல் வெளியுறவுமந்திரி திரு. எபானை மேற்கு ஆசியாவிலுள்ள ஐ. நா. வின் விசேஷ பிரதிநிதியான டாக்டர் குனார் ஜாரிங் இங்கு சந்தித்துப் பேசினார். இவர்களது சந்திப்பு 90 நிமிஷ நேரம் நீடித்தது.

மேற்கு ஆசிய பிரச்னை பற்றி இருவரும் பொதுவாகப் பேசியதாகப் பின்னர் அறிவிக்கப்பட்டது.

டாக்டர் ஜாரிங் இன்று கெய்ரோ செல்கிறார்.

### மல்லாகம் பட்டினசபையாகும்

குரும்பசிட்டி, புதன்

மல்லாகம்கிராமசபையை தரம் உயர்த்தி பட்டின சபை அந்தஸ்து வழங்குவதற்கான நடவடிக்கைகளை எடுக்க ஆவன செய்வதாக உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திரு. எஸ். முருகவேள் தெரிவித்துள்ளார்.

### வருடத்துக்கு ஒரு முறையே பரீட்சை

உடுப்பிட்டி, புதன்

இதுவரை காலமும் பரீட்சைப் பகுதியினரால் நடாத்தப்பட்டுவந்த ஜீ. சீ. ஈ. [சாதாரணம்] ஆகஸ்ட் பரீட்சை கடந்த வருடத்துடன் நிறுத்தப்பட்டு விட்டது. இனிமேல் ஆகஸ்டில் இப்பரீட்சை நடைபெற மாட்டாதெனவும் வருடத்தில் ஒரு முறையே டிசம்பர் ... நடைபெறுமெனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

## இன்று நடைபெறும் சுன்னுகப் பட்டினசபை தேர்தல்

உடுவில், வியாழன்

சுன்னுகம் பட்டினசபைக்கான புதிய அங்கத்தவரைத் தேர்ந்தெடுப்பதற்கான தேர்தல் இன்று நடைபெறுகின்றது. பட்டினசபையின் மூன்றும் வட்டாரத்தை தவிர ஏனைய ஏழு வட்டாரங்களிலும் நடைபெறும் இத் தேர்தலில் சுமார் 4000க்கு அதிகமான வாக்காளர்கள் வாக்களிக்கிறார்கள்.

ஏழு வாக்குச் சாவடிகளில் நடைபெறவிருக்கும் தேர்தல் காலை 8 மணிமுதல் மாலை 5 மணிவரை நடைபெறும். மாலை 5-30 மணி முதல் அவ்வவ் வாக்குச் சாவடிகளில் வைத்தே வாக்குகள் எண்ணப்பட்டு முடிவுகள் வெளியிடப்படும் 7 வட்டாரங்களிலும் மொத்தம் 20 பேர் போட்டியிடுகின்றார்கள். 3-ம் வட்டார அங்கத்தவர் திரு. ஹென்றி ஆசீர்வாதம் போட்டியின்றி தெரிவுசெய்யப்பட்டுள்ளார்.

ஏழு வட்டாரங்களிலும் போட்டியிடும் அபேட்சகர்களும் அவர்களின் சின்னங்களும் பின்வருமாறு:

1-ம் வட்டாரம்: நா. அப்பாப்பிள்ளை [குடை], அ. முருகேசு [மணிக்கூடு], வ. மயில்வாகனம் [சேவல்] சி. சின்னத்துரை [விளக்கு].

2-ம் வட்டாரம்- சே. குமாரசாமி [சேவல்], செ. குமாரவேற்பிள்ளை [குடை], பொ. பொன்னுத்துரை [மணிக்கூடு].

3-ம் வட்டாரம்- திரு. ஹென்றி ஆசீர்வாதம் [போட்டியில்லை].

4-ம் வட்டாரம்- எ. அப்புத்துரை [மணிக்கூடு], ஆ. நடராசா [விளக்கு], சி. சிவஞானம் [சேவல்].

5-ம் வட்டாரம் எஸ், ஆர். பாலசிங்கம் [விளக்கு], மா. நடராசா [குடை].

6-ம் வட்டாரம்- ஏ. பாலசுப்பிரமணியம் [தராசு], ஆ- நல்லநாயகம்] விளக்கு].

7-ம் வட்டாரம்—எ. அரசரத்தினம் [விளக்கு]. பொ. நாகலிங்கம் [சேவல்]. ச. சின்னத்தம்பி [மணிக்கூடு].

8-ம் வட்டாரம்— மு. வி. செல்லத்துரை [தராசு], செ. இராசதுரை[ சேவல்].

## 'வெள்ள நிவாரணம் மோசடி செய்யப்பட்டதா?'

குரும்பசிட்டி, புதன்

மல்லாகம் கிராமசபைக்கு வழங்கப்பட்டுள்ள வெள்ள நிவாரண நிதி ரூபா 2400 மோசடி செய்யப்பட்டுள்ளதாகப் புகார் தெரிவித்து கிராமசபை உறுப்பினர் சிலரும் பொதுமக்களும் யாழ். மாவட்ட அரசாங்க அதிபருக்கு தந்திச்செய்தி அனுப்பியுள்ளனர்.

மல்லாகம் சந்திக்கருகாமையில் இருக்கும் சுவர்களில் இதுசம்பந்தமான கண்டனச் சுலோகங்கள் ஒட்டப்பட்டுள்ளன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விளம்பரம்

## அறிவித்தல்

### சங்கானைப் பட்டின சபை

சங்கானைப் பட்டின சபையால் சேரியொழிப்பு வீடமைப்புத் திட்டத்தில் வாடகைக்கு வழங்கப்பட்ட வீடுகளின் பெயரால் சபைக்கு வரவேண்டிய வாடகைநிலுவைகள் அறவிடுவதற்கு என்னால் வழங்கப்பட்ட விருந்துக் கட்டளையின் பிரகாரம் கைப்பற்றப்பட்ட அசைவுள்ள ஆதனங்கள், பட்டினசபைகள் கட்டளைச் சட்டத்தில்குறிப்பிடப்பட்ட பிரிவுகளோடு, மாநகரசபைகள் கட்டளைச்சட்டத்தின் (அத்தியாயம்) 256 ஆம் பிரிவின் பிரகாரம் பகிரங்க ஏலவிற்பனை மூலம் விற்கப்படுமென இத்தால் அறிவித்தல் தரப்படுகின்றது.

அசைவுள்ள ஆதனங்கள் யாவும் அலுவலக நேரங்களில் பட்டினசபைப்பொதுக்களஞ்சியத்தில் பார்வைக்குள்ளது. 1968 ஆம் வருடம் பெப்ரவரி மாதம் 10ந் திகதி சனிக்கிழமை முற்பகல் 10-00 மணிக்கு அவை யாவும் பகிரங்க ஏலத்தில் விற்கப்படும்.

மேற்கூறப்பட்ட இடத்திலும் நேரத்திலும் அல்லது அதற்கு முன்பும் வாடகை நிலுவைத் தொகையும், செலவும் முறையே செலுத்தப்படும் பட்சத்தில் கைப்பற்றப்பட்ட அசைவுள்ள ஆதனங்கள் திருப்பிக் கையளிக்கப்படும்.

சி. க. திருச்சிற்றம்பலம்,
தலைவர்,
பட்டினசபை, சங்கானை.

பட்டினசபை அலுவலகம்,
சங்கானை, 13-1-1968.

412

---

## JAFFNA SCHOOL OF ACCOUNTANCY AND HIGHER STUDIES

housed at
No. 10, Stanley Road, Jaffna.
offers tuition in all parts of the following examinations:
A. C. W. A.
A. C. C. A.
A. I. B.
and A. I C. S.

Week-end lectures commence on 21-1-68.

For application form contact the SECRETARY.

411

---

## கேள்வி விளம்பரம்

கல்லுண்டாய் உப்பளவரம்பு அமைத்தற்கு கேள்வி விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

விண்ணப்பப் பத்திரங்கள் வழங்கும்முடிவுதிகதி 1-2-68 காலை 10-00 மணி. கேள்வி முடிவு திகதி 2-2-68 காலை 10-00 மணி.

விண்ணப்பப் பத்திரப்படிவம்,வேறு விபரங்கள் வலி. மேற்கு சமாசத்திலும், கல்லுண்டாய் உப்பளத்திலும் அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

க கெங்காதரம்பிள்ளை,
தலைவர்,
வலி. மேற்கு ப. நோ. கூ. ச. சமாசம்,
சங்கானை

413

---

## கடைக்காரருக்கு ரூ. 200 அபராதம்

யாழ்ப்பாணம், வியா, யாழ்ப்பாணம், காங்கேசன்துறை வீதியிலுள்ள ஒரு ஜவுளிக்கடைச் சொந்தக்காரருக்கு இம்மாதம் 8-ம் தேதி கடை, காரியாலய ஊழியர் சட்டத்தை மீறிய

---

## விவாகப் பதிவு இயக்கம்

நயினாதீவு, புதன்

நயினாதீவில் சட்டப்படி விவாகப்பதிவு செய்யாது கணவன் மனைவியாகப் பல வருடங்களாக வாழ்ந்து வந்துள்ளோரை சட்டப்படி விவாகப்பதிவு செய்து வைக்கும் இயக்கமொன்றை நயினாதீவு கிராமசபையினர், கிராம முன்னேற்றச் சங்கத்தினர், கிராம சேவையாளர் ஆகியோர் ஆரம்பித்துவைத்துள்ளனர்.

பதிவுகாரரால் இலவசமாக நடத்தி வைக்கப்படவிருக்கும் இந்த விவாகப்பதிவுகள் தீவுப்பகுதி காரியாதிகாரி திரு. விநாயகமூர்த்தி தலைமையில்நடைபெறவிருக்கிறது. சுமார் 250 குடும்பத்தினர் இவ்விதம்விவாகப் பதிவுசெய்து கொள்ளவிருக்கின்றனர்.

---

## கும்பாபிஷேகம்

நயினாதீவு, புதன்

நயினாதீவு நாகபூஷணி அம்பாளின் தக்கிணபாகத்தில் அமைக்கப்பெற்ற ஸ்ரீ வீரகத்தி விநாயகப் பெருமானுக்கு வசந்தமண்டபம் நவக்கிரக ஆலயம், சண்டேசுரர் ஆலயம், மணிக்கூட்டுக் கோபுரம், யாகசாலை ஆகியவைகள் அமைந்த ஆலய திருப்பணி வேலைகள் பொது மக்களின் பொருளுதவியுடன் பூர்த்தியாக்கப்பட்டுள்ளன. அடுத்த மாதம் 5ம் திகதி மகா கும்பாபிஷேகம் நடைபெறவிருக்கிறது.

---

## பஸ் பிரயாணிகள் சங்கடம்

சங்கானை. புதன்

சங்கானையிலிருந்து அளவெட்டி சுன்னாகம் ஊடாக யாழ்ப்பாணம் செல்லும்பஸ் சேவை சீர் கேடாக இருப்பதால் பாடசாலை செல்லும் மாணவர்கள், அரசாங்க ஊழியர்கள் நேரத்திற்கு செல்ல முடியாதிருப்பதாலும், விவசாயிகள் விளைபொருட்களைச் சந்தைக்குக் கொண்டு செல்ல முடியாதிருப்பதையும் சுட்டிக்காட்டி யாழ். மாவட்ட இ. போ. ச. முகாமையாளருக்கு சங்கானை பட்டின சபைத் தலைவர் திரு. எஸ். கே. திருச்சிற்றம்பலம் எழுதிய கடிதமொன்றிற்குத்தற்போது மேற்படி சேவையை விஸ்தரிப்பதற்கு ஏற்ற சாத்தியமெதுவுமில்லையெனவும் இச் சேவையின் வருமானத்தை நன்கு ஆராய்ந்த பின்னரே தலைமைப்பீடம் விஸ்தரிப்புப்பற்றிக் கூற முடியுமெனவும் இ. போ. ச. முகாமையாளர் பட்டின சபைத் தலைவருக்குப் பதிலளித்துள்ளதாகத் தெரிகிறது.

---

## திருவெம்பாவை பூர்த்தி விழா

கொழும்பு, புதன்

கொழும்பு வெள்ளவத்தை இராமகிருஷ்ண மிஷன் சமய பாடசாலையில் திருவெம்பாவை விழாசிறப்புடன் நடைபெற்றது.

இறுதிநாள் நிகழ்ச்சியின் போது திருவெம்பாவை பற்றி திரு கி. லக்ஷ்மணன் சிறப்புச் சொற்பொழிவாற்றினார்.

ஸ்ரீமத் ரங்கானந்தசுவாமி தலைமையில் நடைபெற்ற இவ்விழா திருவெம்பாவை சங்கீத பாராயணத்துடன் ஆரம்பமாகியது.

---

தாக கூறப்பட்ட குற்றச்சாட்டின் மீது ரூபா 200 அபராதம் விதிக்கப்பட்டது.

ஜவுளிக்கடை சொந்தக்காரர் சார்பில், கொழும்பைச் சேர்ந்த அட்வகேட் துரையப்பா ஆஜரானார்.

---

# வரி விளம்பரம்

## தேவை

ஓய்வுபெற்ற, மது, புகை பாவிக்காத, சுகதேகியான, பிள்ளைகளில்லாத் (சனி ஏழாம் வீட்டில் தற்போது கொழும்பில் வசிக்கும் ஒரு யாழ்ப்பாண இந்து வேளாளருக்கு, கொழும்பிலும் யாழ்ப்பாணத்திலும் வசிப்பதற்கு, சுகதேகியான ஒரு விதவை துணைவியாகத் தேவை. பிள்ளைகளில்லாமலும், வேறு சிக்கல், தொடர்புகளில்லாதவராய், அதே சாதி சமயத்தவராய், நற்பழக்க வழக்க முள்ளவராய், சமய சிந்தனையுடையவராய் இருத்தல்வேண்டும். முழு விபரங்களுடனும் சாதகத்துடனும் விண்ணப்பிக்கவும். கடிதத் தொடர்பு மிக இரகசியம் விளம்பர இல. 2085, C/o ஈழநாடு, யாழ்ப்பாணம்.

2085

---

6 மாசத்திற்கு குத்தகைக்கு ரிறக்ரரும் பெட்டியும் பாவிப்பு மதவாச்சி ஸ்டேஷன்அருகாமை. 1 1/2 கட்டை ஒட்டம் கல்லு இழுவை. நேரில் தொடர்பு கொள்ளவும், விவேகானந்தன், யாழ்ப்பாண வீதி, வல்வெட்டித்துறை. 2086

---

கலா சோப் தொழிற்சாலையில் வேலை செய்வதற்கு மனேஜரும், காசியரும் தேவை. தேர்ந்தெடுக்கப்படுவோர் பிணைப்பணமாக 750/- ரூபா கட்டவேண்டி ஏற்படும். ஆண், பெண் இருபாலாரும் விரும்பத்தக்கது. மனேஜர், கலாசோப் தொழிற்சாலை, சங்கானை.

2082

---

விற்பனையாளர்கள்

நாங்கள் தயாரிக்கும் பொருட்களை வீடுகளுக்கு விற்பனை செய்வதற்கு ஆண்களும் பெண்களும் தேவை. அனுபவமுள்ள சொந்தச் சைக்கிள் வைத்திருப்பவர் விரும்பத்தகுந்தது. பெண்களுக்கு வாகன வசதியும் நல்ல ஊதியமுமுண்டு. 19-1-68 நேரில் வரவும். ஷணுஸ் பஸ் ஸ்ராண்ட், எதிரில், யாழ்ப்பாணம். 2079

---


MANOHARA
JAFFNA
Today only
6-30 & 9-30 p. m.
Shammi Kopoor
Rajshiree
in
JANWAR
(Hindi)
(Fastmen color)



ராஜா
(யாழ்ப்பாணம்)
தினசரி 2-30, 6-30, 9-30
போயா தினங்களில் 4 காட்சி
எம். ஜி. ஆர். - ஜெயலலிதா
நடித்த
காவல்காரன்



நியூ காலிங்கன்
(இணுவில்)
தினசரி 6-30, 10-00 மணி
விடுமுறை தினங்களில் 2-30
ஜெய்சங்கர் — ஜமுனா
நடித்த
குழந்தையும் தெய்வமும்



REGAL JAFFNA
4-40, 7-00 & 9-45 p.m.
WOMEN
of the
WORLD
(adults only)


## கல்வி

வகுப்புக்கள்

ஜி. சி. ஈ. (உயர்தரம் / சாதாரணம்) கலை விஞ்ஞானம், மாணவ ஆசிரிய பயிற்சி வர்த்தகம், சிங்களம், ஆகிய வகுப்புக்களுக்கு விண்ணப்பங்கள் ஏற்கப்படுகின்றன. யாழ்ப்பாண டியூட்டோறியல் கல்லூரி, [Jaffna Tutorial College] 60, அரசடி வீதி, (தட்டாதெருச் சந்தி) யாழ்ப்பாணம். 2083

---

வகுப்புக்கள்:-

மாணவ ஆசிரியர்களுக்கான பரீட்சை (ஆங்கிலம், விஞ்ஞானம், வர்த்தகம், சாதாரணம்) G.C.E உயர்தரம் (ஆசிரியர் தில்லையம்பலம், யாழ்ப்பாணக் கல்லூரி, வடடுக்கோட்டை) விண்ணப்பங்கள்:- 1-2-68 முன். நடைபெறும் வகுப்பு:- G. C. E. சாதாரணம். பதிவாளர் கொலிஜ் ஒவ் எடியூக்கேசன் (College of Education) பழைய பஸ் நிலையம் எதிராக, யாழ்ப்பாணம். 2068

---

## இலவசம்

மில்க்வைற் பார் சோப் மேலுறைகள் ஐந்து சேகரித்து தருபவர்களுக்கு 31-1-1968 வரை ஓர் அழகான காந்திய நீதிக்கலண்டர் இலவசமாக வழங்கப்படும். மில்க்வைற்சோப் தொழிற்சாலை, யாழ்ப்பாணம். 2073

---

## WANTED

A chartered Accountant requires an audit assistant with minimum five years experience in auditing and preparing final accounts to work in Jaffna. Apply stating qualification, experience, age and salary required - C/o Advt. No. 2075 Eela Nadu Ltd Jaffna.

2075

---

## காணவில்லை

தெமட்டக்கொடை அரசினர் தமிழ்வித்தியாலய திரு. சு. மகாலிங்கத்தின் நாட்குறிப்பு, 4 ஆங்கில நூல்கள் முக்கியமான பாடக்குறிப்புகள் கொண்ட பார்சல் தைப்பொங்கலன்று மாலை இரிமலை [769] பஸ்ஸில் தவறிவிட்டது. கண்டெடுத்தோர் அதனை 'ஈழநாடு' காரியாலயத்தில் ஒப்படைப்பின் ரூபா 25 சன்மானம் வழங்கப்படும். 2076

---

புன்னாலைக்கட்டுவன், சுன்னாகம் யாழ்ப்பாணம் வீதியில் 403 பேஜோ கார் Tail Light 14-1-68 காலை தவறிவிட்டது. கண்டெடுத்தவர்களுக்கு சன்மானம் வழங்கப்படும். தொடர்பு கொள்ளவும்: 166, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

1913

---

## சென். அந்தனீஸ் வெற்றி

அல்வாய் சிவானந்தா விளையாட்டுக்கழகத்தின் ஆதரவில் பாஷையூர் சென். அந்தனீஸ் விளையாட்டுக் கழகத்திற்கும் வதிரி டயமென்ஸ் விளையாட்டுக்கழகத்திற்குமிடையில் சிவானந்தா விளையாட்டு மைதானத்தில் ஒரு சிநேகபூர்வமான உதைபந்தாட்ட மோதல் நடைபெற்றது.

ஆட்டம் தொடங்கிய போது இரு கோஷ்டியினரும் விறுவிறுப்பாக ஆடினர். இடைவேளைக்குப் பின் வதிரி டயமன்ஸ் கோஷ்டியின் முன்னணி வீரர்கள் கோல் அடிக்க முயன்றார்கள். ஆனால் சென். அந்தனீஸ் கோஷ்டி பின்னணி வீரர்கள் கோல் எதுவும் போடாமல் தடுத்தனர். இடைவேளைக்குப்பின் மேலும் 2 கோல்களைப் பெற்று இறுதியில் 6-0 கோல்களால் சென். அந்தனீஸ் கோஷ்டியினர் வெற்றியீட்டினர்.

மத்தியஸ்தராக கமலநாதன் கடமையாற்றினார்.

[வி. நி.]

---


இப்பொழுது நடைபெறுகிறது

கிங்ஸ்லி (கொட்டாஞ்சேனை) — பிளாஸா (கொழும்பு)
வெலிங்டன் (யாழ்ப்பாணம்)
விஜயா (மட்டுநகர்) — ஸ்ரீகிருஷ்ணா (திருமலை)
லிடோ (பொறளை) — மொடேர்ன் (பதுளை)



எம். ஜி. ஆர்.
சரோஜா தேவி
அசோகன்
நாகேஷ்

மற்றும் பலர் நடித்த

சரவணா பிலிம்ஸ்

படகோட்டி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரிட்டனின் செலவுக்குறைப்புத் திட்டங்கள்:

## தெ.கி.ஆசியா, பாரசீகக்குடாநாடு இவற்றிலிருந்து படைகள் வாபஸ்

### வாஷிங்டனில் பலத்த அதிருப்தி

லண்டன், ஜன. 17

பிரிட்டனின் உள்நாட்டு, வெளிநாட்டு செலவுக் குறைப்புகளைப் பிரிட்டிஷ்பிரதமர் திரு. ஹரோல்ட் வில்சன் நேற்று பிரிட்டிஷ் பார்லிமெண்டில் அறிவித்தார். இந்தக் குறைப்புகளினால், அடுத்த இரண்டு வருடங்களில் பிரிட்டனுக்கு 70 கோடிப் பவுண் மீதமாகும் என எதிர்பார்க்கப் படுகிறது.

இந்தச் செலவுக் குறைப்பு நடவடிக்கைகளாக, ஹொங் ஹொங்நீக்கலாகத் தென் கிழக்குஆசிய நாடுகளில் உள்ள பிரிட்டிஷ் படைகளும், பாரசீகக் குடாவிலுள்ளபிரிட்டிஷ் படைகளும், 1971-க் இடையில் வாபஸ் பெறப்படும்.



அத்துடன், அமெரிக்காவிடம் பிரிட்டன் வாங்கவிருந்த 50 எவ்-51 போர் விமானங்களுக்கான ஓடரையும் பிரிட்டன் ரத்துச் செய்துள்ளது. பொதுவாக பிரிட்டனின் பாதுகாப்புத் திட்டத்தில் செலவுகள் குறைக்கப்படவிருக்கின்றன.

**சபைத் தலைவர் ராஜினாமா**

பள்ளிக்கூடங்களிலிருந்து விலகுவதற்கான வயதை 15 விருந்து 16 க்குக் கூட்டுவதையும் அரசாங்கம் இரண்டு வருடங்களுக்குப் பின் போட்டுள்ளது. இந்த நடவடிக்கை மீது, பிரபுக்கள் சபைத் தலைவரான லோங் புற் பிரபு, ராஜினாமாச் செய்துள்ளார். திரு. வில்சனின் செலவுக் குறைப்புத் திட்டத்தின் மீது ராஜினாமாச் செய்துள்ளவர் இதுவரை இவர் ஒருவரே.

வெளிநாட்டில் உள்ள பிரிட்டிஷ் படைகளை வாபஸ் பெறுவது பற்றி நேற்று பிரிட்டிஷ் நீதி மந்திரி டெலிவிஷனில் பேசுகையில், பிரிட்டன் இப்போது தான் ஒரு சக்திவாய்ந்த வல்லரசு அல்ல என்ற உண்மையை இந்த நடவடிக்கைகள் மூலம் ஏற்றுக் கொண்டுள்ளது என்று கூறினார். ஆனாலும், ஐரோப்பிய, உலக விவகாரங்களில் அது தனது பங்கை ஆற்றத் தவறாது என்றும் அவர் குறிப்பிட்டார்.

பிரிட்டிஷ் எதிர்க் கட்சித் தலைவரும், கன்சர்வேட்டிக் கட்சித் தலைவருமான திரு எட்வார்ட் ஹீத், அரசாங்கத்தின் உத்தேச செலவுக் குறைப்புகள் நாட்டின் பாதுகாப்புப் படைகளைச் சீர் குலைந்த நிலையில் விட்டுள்ளன எனக் குறிப்பிட்டுள்ளார்.

**வாஷிங்டனில் அதிருப்தி**

பிரிட்டிஷ் பிரதமர் அறிவித்துள்ள வெளிநாட்டுப் படைக் குறைப்பையிட்டு, வாஷிங்டனில் பலத்த அதிருப்தி ஏற்பட்டுள்ளது. பாரசீகக் குடாவிலிருந்து பிரிட்டிஷ் படைகளை நீக்குவதை தவிர்க்கும்படி அமெரிக்க ஜனாதிபதி திரு. ஜோன்சன் பிரிட்டிஷ் பிரதமரிடம் ஆலோசனை கூறியிருந்தும், அங்கிருந்து தனது படைகளை வாபஸ் பெற பிரிட்டன் தீர்மானித்துள்ளது திரு. ஜோன்சனுக்கு அதிருப்தி அளித்துள்ளதாகக் கூறப்படுகிறது.

வெளிநாட்டுத் தளங்களிலிருந்து பிரிட்டிஷ் படைகள் வெளியேறுவதால் ஏற்படும் வெற்றிடங்களை நிரப்ப அமெரிக்கா தயாராயில்லை என வாஷிங்டனிலுள்ள அமெரிக்க ராஜாங்க இலாகா தெரிவித்துள்ளது.

எவ்-51 விமானங்கள் வாங்குவதை பிரிட்டன் கைவிட்டுள்ளதையிட்டு, அமெரிக்க முப்படை வருத்தம் தெரிவித்துள்ளது.

**பிரான்சில் திருப்தி**

பிரிட்டனுக்கும் பிரான்சுக்குமிடையேயான 'கொன்கோர்ட்' விமான உற்பத்தி ஒப்பந்தம், மற்றும் பொருளாதாரத் தொடர்புகள் பிரிட்டனின் செலவுக் குறைப்புத் திட்டங்களினால் பாதிக்கப்படாதிருப்பதையிட்டுப் பிரான்சில் திருப்தி ஏற்பட்டுள்ளது

ஐரோப்பாவிலுள்ளதனது தளங்களை பிரிட்டன் நீக்காது விட்டிருப்பதையொட்டி மேற்கு ஜெர்மனி நிம்மதி தெரிவித்துள்ளது.

**சிங்கப்பூர் பிரதமர் கவலை**

தென்கிழக்காசியாவிலிருந்து பிரிட்டன் தனது படைகளை வாபஸ் பெறத் தீர்மானித்திருப்பதற்குச் சிங்கப்பூர் பிரதமர் திரு. லீ குவான் யீ வருத்தம்தெரிவித்துள்ளார். ஆனாலும் பிரிட்டிஷ் படைகள் சிங்கப்பூரிலிருந்து நீக்கப்படுவதற்கு இன்னும் இரண்டு வருடகாலம் இருப்பது, சிங்கப்பூர் தனது பாதுகாப்புப் படைகளைப் புனரமைப்புச் செய்யச் சிறிது அவகாசமாவது அளிப்பதையிட்டுப் பிரதமர் ஓரளவு திருப்தி தெரிவித்தார்.

சிங்கப்பூர், மலேஷியா, ஆகிய இரண்டு நாடுகளுக்கும் ஓர் இணைப்புப் பாதுகாப்புத் திட்டத்தை உருவாக்க நிதியுதவி அளிப்பதற்கு பிரிட்டன் முன்வந்துள்ளதும் சிங்கப்பூர் பிரதமருக்கு ஓரளவு ஆறுதல் அளித்துள்ளது. இந்த இணைப்புப் பாதுகாப்புத்திட்டம்பற்றி ஆராய்வதற்கு ஒரு பிரேஷ் பிரிட்டிஷ் இராணுவ உத்தியோகத்தர் [illegible] நாடுகளுக்கும் விஜயம் செய்வரெனத் தெரிகிறது.

**சுவிட்சர்லாந்து வரவேற்றது**

பிரிட்டிஷ் அரசாங்கத்தின் செலவுக் குறைப்புகளைச் சுவிட்சர்லாந்து வரவேற்றுள்ளது. இந்தக் குறைப்பு நடவடிக்கைகளின் மூலம் பிரிட்டிஷ் பவுணின் மதிப்பு திரும்பவும் நிலைநாட்டப்படுமென அது நம்பிக்கை தெரிவித்தது.

**விவாத ஆரம்பம்**

திரு. வில்சனின் செலவுக் குறைப்புகள்மீதான விவாதம் பிரிட்டிஷ் காமென்ஸ் சபையில் இன்று ஆரம்பமாகிறது. இவ்விவாதம் இரண்டு நாட்களுக்கு நடைபெறும்.

---

## மகாத்மா காந்தியின் நூற்றுண்டு விழா

### ஒக். 2-ந் திகதி தொடக்கம் உலகெங்கும் கொண்டாடப்படும்

புதுடில்லி, ஜன. 17

இவ்வருடம் ஒக்டோபர் 2-ம் திகதி தொடக்கம், யூனெஸ்கோ ஆதரவில், மகாத்மா காந்தியின் நூற்றுண்டுவிழா உலகெங்கும் கொண்டாடப்படவிருக்கிறது.

இக் கொண்டாட்டங்களையொட்டி, புதுடில்லியில் காந்தி பற்றிய கண்காட்சி ஒன்று பெருமளவில் நடத்தப்படும்.

வெளி நாடுகளில் நடைபெறவிருக்கும் நூற்றுண்டு விழாக் கொண்டாட்டங்களின் சிகரமாக, 1969-ம் ஆண்டு 2-ந் திகதியிலிருந்து பிரான்ஸ் தலைநகரான பாரிஸில், கருத்தரங்கு ஒன்று ஆரம்பமாகி, இருவாரங்கள் நடைபெறும்.

காந்தியின் வாழ்க்கையைச் சித்தரிக்கும் திரைப் படமொன்றும் தயாரிக்கப் பட்டுவருகிறது. முப்பது ரீல்களையும், 25,000 அடிகளையும்கொண்ட இத்திரைப் படம், அடுத்த ஒக்டோபரில் வெளியிடப்படும்.

---

## ஷேக் அப்துல்லாவுக்கு சாதீக் அழைப்பு

ஜம்மு, ஜன. 17

விடுதலை செய்யப்பட்டுள்ள முன்னாள் காஷ்மீர் பிரதமரும், விடுதலைப் பேராட்டத் தலைவருமான ஷேக் அப்துல்லாவை காஷ்மீரிலுள்ள ஜனநாயகம், சமய சார்புள்ள சக்திகளுடன் சேர்ந்து உழைக்குமாறு காஷ்மீர் பிரதமர் திரு. சாதிக் அழைத்துள்ளார்.

நேற்று இங்கு ஒரு கூட்டத்தில் பேசுகையிலேயே அவர் இவ்வாறு அழைப்பு விடுத்தார்.

பாகிஸ்தானுடன் நெருங்கிய நட்புறவு வைப்பதுபற்றிய ஷேக் அப்துல்லாவின் ஆர்வம்பற்றி அவர் குறிப்பிடுகையில், பாகிஸ்தானுடன் நட்புறவு வைத்துக் கொள்வதில் காஷ்மீர் மக்களுக்கும் விருப்பம் உண்டு என்றார். ஆனால் காஷ்மீர் இந்தியாவின் ஒரு பகுதி என்பதை மட்டும் நாம் மறந்துவிடக்கூடாது என்றும் அவர் குறிப்பிட்டார்.

இந்தியாவுடன் காஷ்மீர் இணைவதற்கான ஒப்பந்தத்தில் அப்போதைய காஷ்மீர் மகாராஜாவைக் கைச்சாத்திடத் தூண்டியவர் ஷேக் அப்துல்லாவே என்பதை ஷேக் மறந்துவிடக்கூடாது என்றும் திரு. சாதீக் கூறினார்.

---

## கவுட்டமாலாவில் இரு அமெரிக்கர் கொலை

கவுட்டமாலா, ஜன. 17

கவுட்டமாலாவிலுள்ள அமெரிக்கத் தூதரகத்தைச் சேர்ந்த இரண்டு இராணுவ உத்தியோகத்தர்கள் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளனர்.

அதி விரைவாகச் சென்ற காரொன்றிலிருந்து செய்யப்பட்ட இயந்திரத்துப்பாக்கிச் சூட்டுக்கே அவர்கள் இருவரும் பலியாகினர்.

முன்னதாக, கவுட்டமாலா அரசியல்வாதி ஒருவரும், அவரது மெய்க்காப்பாளரும் இயந்திரத்துப்பாக்கிச் சூட்டுக்கு இரையாகினர்.

---

## மொழிப்பிரச்னையைவிவாதிக்க ஒரு நாள் அவசரக் கூட்டம்

### தமிழக சட்ட சபையில் 23-ந் திகதி நடைபெறும்

சென்னை, ஜன. 17

மொழிப் பிரச்னையை விவாதிக்கத் தமிழக சட்ட சபையின் ஒரு நாள் அவசரக் கூட்டமொன்று, இம்மாதம் 23-ம் திகதி நடைபெறவிருக்கிறது.

இத்தகவலைத் தமிழகப் பொதுப்பணி மந்திரி திரு. மு. கருணாநிதி இங்கு வெளியிட்டார்.

அன்றைய கூட்டத்தில் மொழிப் பிரச்னை சம்பந்தமாக ஓர் அரசாங்கத் தீர்மானமொன்றும் தாக்கல் செய்யப்படலாமென்று அவர் மேலும் குறிப்பிட்டார்.

இதற்கிடையில், தமது இந்தி எதிர்ப்பு இயக்கத்தைக் கைவிடுவதென மதுரை மாணவர்கள் தம்மிடம் உறுதியளித்திருப்பதாகத் தமிழக உணவு மந்திரி திரு. கே. ஏ. மதியழகன், மதுரையில் நிருபர்களிடம் பேசுகையில் தெரிவித்துள்ளார். பள்ளிக்கூடங்கள், கல்லூரிகள் மீண்டும் திறக்கப்படுகையில், தாம் வகுப்புகளுக்குச் செல்வதாகவும் அவர்கள் தம்மிடம் உறுதியளித்துள்ளதாக அவர் மேலும் கூறினார்.

---

## காங்கிரஸ் தலைவர் நிஜலிங்கப்பா ஆலோசனை

புதுடில்லி, ஜன. 17

இந்தியாவின் மொழிப் பிரச்னையை ஆராய உத்தியோக பூர்வமற்ற தனியார் கமிட்டியொன்றை நியமிக்கத் தாம் திட்டமிட்டுள்ளதாக இந்திய காங்கிரஸ் தலைவர் திரு நிஜலிங்கப்பா இங்கு பத்திரிகை நிருபர்களிடம் பேசுகையில் தெரிவித்தார்.

இந்தி பேசும், பேசாத ராஜ்யங்களிலுள்ள பல கட்சித் தலைவர்களுடனும் மொழிப் பிரச்னை பற்றிப் பேச்சு வார்த்தைகள் நடத்திய பின்னரே, இத்தகைய கமிட்டி ஒன்றை நிறுவத் தாம் உத்தேசித்திருப்பதாக அவர் மேலும் குறிப்பிட்டார்.

இந்தி மொழியை இணைப்பு மொழியாக்குவதில் இந்தி பேசும் ராஜ்யங்களை அவசரப்பட வேண்டாமெனத் திரு. நிஜலிங்கப்பா கேட்டுக் கொண்டார். இப்போதுள்ள நிலைமையை இப்படியே விட்டுவிட்டால், தெற்கத்தையமக்கள் தாமாகவே அடுத்த 10 ஆண்டுகளில் இந்தியைப் படிப்பார்கள் எனத் தாம் [illegible] கவும் அவர் [illegible]

---

## கி. ஜெர்மனிக்கு ரஷ்ய தலைவர்களின் திடீர் விஜயம்

கி.பெர்லின் ஜன. 17

ரஷ்யாவின் மூன்று பெருந் தலைவர்களான திரு. பிரெஷ்னெவ், திரு. பொட்கோர்ணி, திரு. கொஸிஜின் ஆகியோர் திங்கட்கிழமையன்று ஆச்சரியந்தரும் சடுதியான விஜயம் ஒன்றைக் கிழக்கு ஜெர்மனிக்கு மேற்கொண்டுள்ளனர்.

முன்னதாக அவர்கள் போலந்துக்குக் கடந்த வார இறுதியில் ஓர் இரகசிய விஜயத்தில் சென்றிருந்ததைத் தொடர்ந்து, இந்தக் கிழக்கு ஜெர்மனி விஜயம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

மேற்குஜெர்மனித்தலைவர்களுடன் ரஷ்யத்தலைவர்கள் நடத்திய பேச்சுவார்த்தைகளில், சகல விஜயங்களிலும் இரு தரப்பினரும் கருத்தொற்றுமை கண்டதாக அறிவிக்கப்பட்டது.

போலந்து, கிழக்கு ஜெர்மனி ஆகிய நாடுகளுக்கு ரஷ்யத் தலைவர்கள் செய்துள்ள விஜயம், அடுத்த மாதம் புடாபெஸ்டில் நடைபெறவிருக்கும் உலகக் கம்யூனிஸ்ட் மகாநாட்டுக்கு ஆயத்தங்கள் செய்யுமுகமாக மேற்கொள்ளப்பட்டதாகவிருக்கலாம் என ஊகிக்கப்படுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மணிவாக்கு

"கடவுள் இல்லை" என்பவர் வெறும் பெயரை இல்லை என்கிறார்கள் ... நீ பெயரா, வடிவா? இல்லையய்யா நீ நில்லையப்பா! உன்னை மறந்த வாழ்க்கை தொல்லையப்பா! இல்லை என்பவர் உள்ளத்திலும் இருக்கின்றேன் என்று பேசவில்லையப்பா.

கவி யோகி சுத்தானந்தபாரதி


# ஈழநாடு

Eelanadu National Tamil Daily
Telegram: EELANADU Jaffna
Post Box: 49 Jaffna
Telephone: 389

யாழ்ப்பாணம் பிலவங்கஹூ தை மீ 4௳ (18-1-68


## பிரிட்டனின் சிக்கன நடவடிக்கை

பிரிட்டன் தனது பொருளாதார நெருக்கடியைச் சமாளிப்பதற்காக பல தீவிர நடவடிக்கைகளை மேற்கொண்டிருக்கிறது. உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் தனது செலவுகளை அது வெகுவாகக் குறைத்துக் கொள்கிறது. இந்தச் சிக்கன நடவடிக்கைகள் மூலம் அடுத்த இரண்டு வருடங்களில் பிரிட்டன் எழுபது கோடி பவுண் மீதப்படுத்தும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. திரு வில்சன் துணிந்து மேற்கொண்டுள்ள இந்த நடவடிக்கைகள் பிரிட்டனிலேயே ஓரளவு எதிர்ப்பைச் சம்பாதிக்கக்கூடும். அமெரிக்காவுக்கும் இது பிடிக்கவில்லை.

தென்கிழக்கு ஆசிய நாடுகளில் உள்ள பிரிட்டிஷ் தளங்களையும் பாரசீக வளைகுடாவிலுள்ள தளங்களையும் மூடி தனது படைகளை பிரிட்டன் வாபஸ் பெறவிருக்கிறது. அமெரிக்காவிடமிருந்து வாங்குவதற்கிருந்த 50 எவ்-51 ரக போர் விமானங்களையும் அது இனி வாங்கமாட்டாது. பிரிட்டனின் பாதுகாப்புச் செலவுகளில் பெரும் வெட்டு விழுகிறது. இது ஒரு முக்கிய அம்சம் மட்டுமல்ல பிரிட்டனின் சரித்திரத்தில் ஒரு புதிய திருப்பமுமாகும்.

ஒரு காலத்தில் சூரியன் அஸ்தமிக்காத சாம்ராஜ்யமாக விளங்கியது பிரிட்டன் பின்னர் அது 'கிழட்டுச்சிங்கம்' என்றும் வர்ணிக்கப்பட்டது. என்றாலும் 1956-ம் ஆண்டில் சூயஸ் தகராறு ஏற்பட்ட போது பிரிட்டன் தனக்கும் சக்தியிருக்கிறது என நினைத்துக்கொண்டு தலைகாட்டியது. அதில் தலையைக் கவிழ்த்துக் கொள்ள நேர்ந்ததிலிருந்து இன்றுவரை தலை தூக்கவே முடியாதிருக்கிறது. பிரிட்டன் தன்னைத் தான் - தனது சக்தியை - இன்று சரியாக உணர்ந்து விட்டது. இனியும் தாம் ஒரு வல்லரசு என்று நினைத்து வீணாகச் செலவு செய்வதில் அர்த்தமில்லை யென்பதை அது புரிந்து கொண்டுவிட்டது.

சிலமாதங்களின் முன் தனது ஸ்டேர்லிங் நாணய மதிப்பைக் குறைத்துக் கொண்டது, பொருளாதார நெருக்கடியைச் சமாளிப்பதற்கு அது எடுத்த ஆரம்ப நடவடிக்கைதான். உலகில் பெருகிவரும் ஜனத்தொகையும் அதற்கு ஈடுசெய்யும் வகையில் உணவு உற்பத்தி அதிகரிக்காததும், உலகில் நெருக்கடியேற்படுவதற்கு முக்கிய காரணமாகும். பல்வேறு நாடுகளிலும் அந்தந்த நாடுகளில் தோன்றும் உள்நாட்டுப்பிரச்னைகள், உற்பத்திக்குறைப்புக்கு மற்றொரு காரணமாக இருக்கிறது. இவை தவிர ஆயுத உற்பத்தியும், அண்டை நாடுகள் ஒன்றின் மீது ஒன்று அவநம்பிக்கையும் அச்சமும் கொண்டு பாதுகாப்பு நடவடிக்கைகளுக்காகப் பெருந்தொகையான பணத்தைச் செலவிடுவதும் பொருளாதார நெருக்கடி ஏற்படுவதற்கு காரணம் என்று சொல்லலாம். வியட்நாம்பிரச்னை, மேற்கு ஆசிய பிரச்னை, இவை அமெரிக்கா, பிரிட்டன் ஆகியவைகளுக்கு மட்டுமல்லாது அபிவிருத்தி குறைந்த சிறிய நாடுகளையும் நேரடியாகவும் மறைமுகமாகவும் பெரிதும் பாதித்துள்ளது. பிரிட்டன், தென்கிழக்காசியாவிலுள்ள தனது படைகளைத்தான் வாபஸ் பெறவிருக்கிறது. இந்த இடங்களில் அமெரிக்கா படைகளை நிரப்ப மாட்டாதென அமெரிக்க அதிகாரிகள் தெரிவித்திருந்த போதிலும் "ஜனநாயகத்தைப் பாதுகாப்பதற்காக" அது தனது படைகளை அங்கு அனுப்ப மாட்டாதென்று கூறமுடியாது.

தனது பொருளாதார நெருக்கடியைச் சமாளிப்பதற்காகவே பிரிட்டன் இந்த நடவடிக்கைகளை மேற்கொண்டிருக்கிறது. அமெரிக்காவுக்கும் பொருளாதார நெருக்கடி ஏற்பட்டிருக்கிறது. அதுவும் தனது செலவுகளைக் குறைத்துக் கொள்ள சில நடவடிக்கைகளை மேற்கொள்ளவிருக்கிறது. வெளிநாடுகளுக்கு அளித்துவரும் உதவிகளைக் குறைத்துக் கொள்வது சிக்கன நடவடிக்கைகளில் ஒன்று.

பிரிட்டனைப் பின்பற்றி அமெரிக்காவும் மற்றும் கம்யூனிஸ்ட் வல்லரசுகளும் கூட வெளியிலுள்ள தனது தளங்களை மூடிவிடுவதுடன் படைகளையும் வாபஸ்பெற்றுக் கொள்ளவும், ஆயுத உற்பத்திகளையும் நிறுத்தி வெளியாருக்கு ஆயுதங்கள் வழங்குவதையும் நிறுத்திக் கொண்டால் உலகில் தானாகவே அமைதி நிலவவழிபிறந்து விடும். படைகளுக்கும் ஆயுதங்களுக்கும் செலவிட்ட தொகையை உணவு உற்பத்திக்குச் செலவிட்டால் உலகில் பசியும் பஞ்சமும் நீங்கி விடும்.

## தெய்வப்பாவை நூல் அறிமுகம்

யாழ்ப்பாணம், வியா

சொக்கன் எழுதிய தெய்வப்பாவை யாழ் நகர மண்டபத்தில் திரு மு வைரமுத்து தலைமையில் இம்மாதம் 22-ம் திகதி இரவு 7-30 மணிக்கு நிகழவிருக்கிறது. தெய்வப்பாவை நாடக இடைவேளையின் போது நடைபெறும் இவ்வறிமுகத்தில் முதல்வர் ... துரைத்துவம் ... பெறுவார்

## வாக்காளர் பார்வைக்கு

யாழ்ப்பாணம், வியா.

திருத்தி அமைக்கப்பட்ட பாராளுமன்ற தேர்தல் வாக்காளர் இடாப்புகள் பொதுமக்களின் பார்வைக்காக உள்ளூராட்சி அலுவலகம். காரியாதிகாரிகந்தோர் கிராமசேவையாளர் கந்தோர். தபாற்கந்தோர் ஆகிய இடங்களில் வைக்கப்பட்டிருக்கின்றன.

பொதுமக்கள் இவற்றைப் பார்வையிட்டு இந்த இடாப்புகளில் செய்யவேண்டிய திருத்தங்கள், அதாவது பெயர் சேர்க்கப்படவேண்டின். நீக்கப்பட வேண்டின் அல்லது பெயர் மாற்றம் செய்யப்படவேண்டியிருந்தால் உடனடியாக தேர்தல் இலாகாவுடன் தொடர்பு கொண்டோ அல்லது இதற்கான மனுப்பத்திரங்களை காரியாதிகாரி கந்தோர் உள்ளூராட்சி அலுவலகம் ஆகிய இடங்களில் பெற்றே தேர்தற்கந்தோருக்கு அனுப்பிவைக்கவேண்டும் என அறிவிக்கப்பட்டுள்ளது. [ந. நி]

## 'துக்கதினம்' கைவிடப்பட்டது

யாழ்ப்பாணம், வியா.

ஸ்தல தாபன தொழிலாளர்கள் அனுஷ்டித்து வந்த மூன்றுநாள் துக்கதினம் நேற்று முன்தினம் யாழ். உள்ளூராட்சி அமைச்சு காரியாலயத்தின் முன் நடந்த உண்ணாவிரதத்துடன் முடிவடைந்தது.

இலங்கை பூராவுமுள்ள ஐக்கிய இலங்கை ஸ்தலஸ்தாபன தொழிலாளர் சங்க அங்கத்தவர்கள் 4000 பேர் வரை கறுப்புப் பட்டிகள் அணிந்து துக்கதினம் அனுஷ்டித்தனர். தாய்ச்சங்க காரியதரிசி திரு. ஆர். செல்லையா நல்லூர்க் கந்தசாமி கோவில்முன் தனது உண்ணாவிரதத்தை ஆரம்பித்தார் மாலை 5 மணியளவில் உள்ளூராட்சி உதவி ஆணையாளர்கள் திரு மாணிக்கவாசகர் திரு முருகவேல் ஆகியோர் இவரைச்சந்தித்து தாங்கள் பேச்சுவார்த்தை நடத்த அமைச்சருடன் உடனடியாக தொடர்பு கொள்ள ஏற்பாடு செய்வதாகக்கூறிய தன் பேரில் திரு செல்லையா தனது உண்ணாவிரதத்தை கைவிட்டார்.

யாழ் கச்சேரிமுன் உண்ணாவிரதமிருந்த பருத்தித்துறை அங்கத்தவர்கள் இருவரையும் பருத்தித்துறை எம். பி. திரு. கே. துரைரத்தினம்சந்தித்து தான் ஆவன செய்வதாகவும் வாக்குறுதியளித்துள்ளார்.

ஸ்தலஸ்தாபன ஊழியர் தமது சம்பள உயர்வு மற்றும் கோரிக்கைகள் சம்பந்தமாக துக்கம் அனுஷ்டித்தனர். [ந.நி]

## புதிய நியமனம்

உடுவில், புதன்

சந்தரோடை தமிழ்க்கலவன் பாடசாலையின் தலைமை ஆசிரியராக கடமையாற்றிவந்த திரு. கே ஆறுமுகம் சந்தரோடை ஸ்கந்தவரோதயக் கல்லூரியின் ஆரம்ப பிரிவு அதிபராக நியமனம் பெற்றுள்ளார்.

திரு. ஆறுமுகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரியின் ஆரம்ப பிரிவு அதிபராக பலகாலம் சேவை புரிந்து சிலவருடங்களுக்கு முன்பு தான் தமிழ்க்கலவன் பாடசாலைக்கு மாற்றப்பட்டிருந்தார். தற்சமயம் தமிழ்க்கலவன் பாடசாலையின் தலைமை ஆசிரியராக திரு. பெரியதம்பி நியமிக்கப்பட்டுள்ளார்.

வடபகுதியில் சென்றவருடத்தில் மட்டும்

# 386 ஏக்கர் நிலத்தில் பயிர்ச்செய்கை

யாழ்ப்பாணம், வியா.

வடமாகாணத்தில் சென்ற வருடம் பயிர்ச்செய்கைக்கென சுமார் 386 ஏக்கர் நிலம் பகிர்ந்து கொடுக்கப்பட்டதாக யாழ்ப்பாணம் காணிப்பகுதி தெரிவித்துள்ளது.

கிராமமுன்னேற்றத் திட்டம், படித்த வாலிபர் குடியேற்றத்திட்டம், உப உணவு உற்பத்தித்திட்டம் ஆகியவற்றின் கீழ் இவை பகிர்ந்தளிக்கப்பட்டன.

கிராம அபிவிருத்திட்டத்தின் கீழ் சுமார் 87 ஏக்கர் நிலம் வழங்கப்பட்டதாகவும் இதில் 50 ஏக்கர் நிலம் பூநகரிப் பகுதியில் வழங்கப்பட்டதாகவும் இத்திட்டத்தின் கீழ் கராச்சி, பச்சிலைப்பள்ளி, வடமராட்சி, தென்மராட்சி, வலிகாமம் கிழக்கு துணுக்காய் ஆகிய இடங்களிலும் காணிகள் வழங்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

மேட்டுநிலக் குடியேற்றத் திட்டத்தின்கீழ் முள்ளியவளையில் என்னுமிடத்தில் 77 சத வீதமான காணிகள் தென்னைப்பயிர் செய்கைக்காக விநியோகிக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

உபஉணவுப் பயிர்ச்செய்கைகளுக்காக கராச்சியில் 2 ஏக்கரும், வலிகாமம் கிழக்கில் ஒரு ஏக்கரும், துணுக்காயில் 2 ஏக்கரும் பச்சிலைப்பள்ளியில் ஒரு ஏக்கரும் பூநகரியில் 5 ஏக்கரும் வழங்கப்பட்டன. [வி. நி.]

## 'நானூறுவீடுகளை இலவசமாக கட்டிக் கொடுத்திருக்கிறர்'

புன்னாலைக்கட்டுவன், புதன்

"சத்திய சாயி பாபாவின் சாந்தி நிலையத்தில் உண்மையான சமத்துவம் நிலவுவதைக் கண்டேன். பல்வேறு மொழியினரும், சாதியினரும், மதத்தவரும் அவரிடம் உரிமையன்புடன் சென்று தமது குறைகளை நிவர்த்திக்கக்கண்டேன்"

புட்டபதியிலுள்ள சத்திய சாயி பாபாவின் சாந்தி நிலையத்தில் அவருடன் 48 நாட்கள் தங்கிய ஊரெழு கண்ணகி அம்மன் ஆலய அர்ச்சகர் ஸ்ரீகிருஷ்ணசுவாமி ஐயர் அண்மையில் இந்தியாவிலிருந்து திரும்பியதும், நமது நிருபரிடம் மேற்கண்டவாறு கூறினர்,

தொடர்ந்து அவர் கூறியதாவது; "சத்தியசாயி பாபாவின் சித்திகள் சக்திவாய்ந்து உலகிலுள்ள பல மக்கள் மட்டுமன்றி, அவரது ஆசிரியரே இன்று அவரது பாத நிழலில் சாந்தி பெற்று வருகிறார். அவரது சாந்தி நிலையத்தைச் சுற்றிவர, நானூற்றுக்கு மேற்பட்ட வீடுகள் இலவசமாகக் கட்டியெழுப்பப்பட்டு, தரிசிப்போருக்குச் சகல வசதிகளுடனும் கொடுக்கப்பட்டுள்ளன. அவ்வீடுகளில வைக்கப்படும் பொருட்கள் திருட்டுப் போவதில்லை. நோயாளிகள் விஷபத்திர அவரது சித்திகள் வர்ணிக்க முடியாது."

## உடுப்பிட்டி எம்.பி.யின் 'கலந்துரையாடல்'

உடுப்பிட்டி, புதன்

உடுப்பிட்டி எம். பி. திரு. மு. சிவசிதம்பரம் ஒவ்வோர் மாதமும் கடைசிப் போயா தினத்தில் பத்திரிகை நிருபர்களுக்குப் பேட்டியளிக்க ஒழுங்கு செய்துள்ளார். எதிர் வரும் 22-ம் திகதி போயா தினத்தன்று திரு. மு. சிவசிதம்பரம் எம். பி. பத்திரிகைநிருபர்களுடனான முதலாவது சந்திப்பில் கலந்து கொள்வார்.

தொகுதி மக்களின்தேவைகளையும், வாழ்க்கைப் பிரச்சினைகளையும் பற்றியும் இப்பிரச்சினைகளைப் போக்கத் தானும், அரசாங்கமும் எடுக்கும நடவடிக்கைகள் பற்றியும் பொதுமக்கள் நன்கு அறிந்துகொள்வதற்காகவே எம். பி. இக்கலந்துரையாடல் கூட்டத்திற்கு நிருபர்களை அழைத்துள்ளார்.

## கணவன் பொலிஸில் முறைப்பாடு

குரும்பசிட்டி, புதன்

இரண்டு குழந்தைகளின் தாயாரும் சுண்டுக்குளி வாசியுமான சரஸ்வதி என்ற இளம் பெண் தனது கணவனையும் குழந்தைகளையும் விட்டுப் பிரிந்து வீட்டை விட்டுச் சென்று விட்டதாக பொலிசில் புகார் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சுமார் 800 ரூபா பெறுமதியான நகைகளையும் ரொக்கப் பணம் ரூபா எண்பதையும் இப் பெண் தன்னுடன் எடுத்துச் சென்றுவிட்டதாகவும் கூறப்படுகின்றது.

இது சம்பந்தமாக சுன்னாகம் பொலிஸில் சுண்டுக்குளியைச் சேர்ந்த ஆசீர்வாதம் துரைராசா (40) என்பவர் செய்துள்ள முறைப்பாட்டில் கூறப்படுவதாவது:-

1958-ம் ஆண்டில் சரஸ்வதியை நான் திருமணம் செய்தேன். என் மூலம் இவருக்கு இரு குழந்தைகள் உண்டு இம்மாதம் 12ம் திகதி உடுவிலில் உள்ள தனது தாயின் வீட்டுக்குச் செல்லுவதாகக் கூறி மனைவி சென்றார். இரு நாட்கள் கழிந்தும் மனைவி வீடு திரும்பவில்லை நான் உடுவிலுக்குச் சென்று பார்த்த போது அங்கு மனைவியைக் காணவில்லை. அயல் வீட்டுக்காரர் மூலம் எனது மனைவி ஏற்கனவே திருமணமான சண்முகம் என்பவருடன் சங்கானையில் ஒரு வீட்டில் வசிப்பதாக அறிந்தேன் குழந்தைகள் இரண்டும் என்னுடனே தற்போது இருக்கின்றார்கள். மனைவி வீட்டிலிருந்து ரொக்கப் பணம் 80 ரூபாவும் 800 ரூபா பெறுமதியான நகைகளையும் தன்னுடன் எடுத்துச் சென்றுள்ளது பின்னர் எனக்குத் தெரிய வந்தது

இப் புகார் குறித்து சுன்னாகம் பொலிஸார் விசாரணை நடாத்தி வருகின்றனர்.

## கடை தீக்கிரை

குரும்பசிட்டி, புதன்

அளவெட்டி தெற்கிலுள்ள கடையொன்று தீக்கிரையாக்கப்பட்டுள்ளது.

இதுபற்றி கடையின் சொந்தக்காரர் செல்லத்துரை குலசிங்கம் சுன்னாகம் பொலிஸில் செய்துள்ள புகார் ஒன்றில் இக்கடை தீக்கிரையானதன் மூலம் தமக்கு சுமார் 700 ரூபாவரை நஷ்டம் ஏற்பட்டுள்ளதாகவும் சில விஷமிகளால் தமது கடை தீக்கிரையாக்கப்பட்டதாகவும் தெரிவித்துள்ளார்.

சுன்னாகம் பொலிஸார் இது குறித்து புலன் விசாரணை செய்துவருகின்றனர்.

## தாக்குண்டவர் ஆஸ்பத்திரியில்

குரும்பசிட்டி, புதன்

தனது வாழைத் தோட்டத்தில் தொழில் புரிந்து கொண்டிருக்கையில் தலையில் கத்தி வெட்டிற்கும், பலத்த பொல்லுத் தாக்குதலுக்கும் ஆளான கட்டுவனைச் சேர்ந்த 42 வயதான கந்தவனம் ஆறுப்பிள்ளை என்பவர் படுகாயங்களுடன் யாழ்ப்பாணம் பெரியாஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இவரைத் தாக்கியதாகக் கருதப்படும் இரத்தினம் செல்லன், இளையதம்பி, அச்சுதநேசன் ஆகிய இருவரும் பொலிஸாரிடம் அகப்படாது தலைமறைவாகியுள்ளனர். இது சம்பந்தமாக சுன்னாகம் பொலிஸார் விசாரணை நடாத்தி வருகின்றனர்.

## புதிய வீதிகள் அமைக்க முயற்சி

யாழ்ப்பாணம், வியா.

மேலதிக அரசாங்க அதிபர் தலைமையில் ஒரு மகாநாடு நேற்றுக் கூட்டப்பட்டது. இந்த மகாநாட்டில் காணி அபிவிருத்தி உத்தியோகத்தர் உட்பட மற்றும் பல அதிகாரிகளும் கலந்து கொண்டனர். இம் மகாநாட்டில் புதிய குடியேற்றத் திட்டங்களுக்கு வீதிகள் அமைப்பது சம்பந்தமாக ஆராயப்பட்டது. இதற்குத் தேவையான இயந்திர சாதனங்கள் வந்தவுடன் இவ்வேலைகள் ஆரம்பிக்கப்படும் எனவும் இக்கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது. (ந. நி]

## இன்றைய பலன்

[18-1-68]

வியாழக்கிழமை

தை மீ 4௳

நட்சத்திரம்- மகம் இரவு 2-43 மேல்பூரம்.

திதி- திருதியை இரவு 9-11 மேல் சதுர்த்தி.

சுபநேரம்- 8-04 - 9-34

ராகுகாலம்- 2-04- 3-34

இன்று பிறந்தவர்களுக்கு: இவ்வாண்டுசமபலனையே குறிப்பிடுகின்றது. நீண்ட பிரயாணத்துக்கு இடமுண்டு. பிள்ளைகளால் சிறுதொல்லைகள் ஏற்படலாம். எனினும்பெரியோர் மதிப்புக்கும், பொருள் வரவுக்கும் சிறப்பான காலமாகும். சுகாதாரம் வேண்டும்.

மேஷம் - பாக்கிய விருத்தி, பளிங்கு மனம்

ரிஷபம்- ஆற்றல் மிகுதி, ஆதரவு பெருகும்.

மிதுனம் - தனத்துடன் வாழ்வீர், தாராள மனம்.

கடகம்- மூளைக்குவேலை முணுமுணுப்பு.

சிம்மம்- நலிவுக்கு இடமுண்டு, நாவடக்கம் நன்று.

கன்னி - நிதியில் அபிவிருத்தி, நிம்மதிபிறக்கும்.

துலாம் - எண்ணியது தடைப்படும், இனவழிப் பூசல்.

விருச்சிகம் - தாய்வழிப் பெருமை, தரமான வாழ்வு.

தனுசு - புத்திர சுகம், புதுப்பாதை திறக்கும்.

மகரம்- திடீர்தாக்குதல், திகைக்கவைக்கும் சம்பவம்.

கும்பம்- இல்லம், இன்றது கட்டி வெல்லம்.

மீனம்-நம்பிக் கெடுதல், நஷ்டமுமுண்டு.

— சோதிடக்கலாநிதி —
திருமலை வேலுப்பிள்ளை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 'கலாச்சார வளர்ச்சிக்கு உள்ளூராட்சி மன்றங்களின்பணி'

### உதவி ஆணையாளர் கூறுகிறார்

குரும்பசிட்டி, புதன்

இலங்கையில் 1956-ம் ஆண்டில் ஆட்சி புரிந்த பண்டாரநாயக்கா அரசாங்கம் உள்ளூராட்சி சேவையை உன்னத நிலைக்குக்கொண்டு வந்துள்ளது. இதனால் யாழ்ப்பாணப் பகுதிகளில் நிர்வாகத்தை மட்டும் நடாத்திவந்த உள்ளூராட்சி மன்றங்கள் சமூக கலாச்சார வளர்ச்சிக்கு ஒத்துழைப்பு உதவி வழங்கி மேல்நிலைப்படுத்த உதவின சாகித்திய விழாக்களைக் கொண்டாடியும் ஈழத்து எழுத்தாளர்களின்படைப்பு நூல்களைப் பெருமளவில் விலைகொடுத்து வாங்கி ஆதரித்தும் நூல்நிலையங்களை நிறுவியும் பல ஆக்கவேலைகளை எமது பகுதி உள்ளூராட்சிமன்றங்கள் செய்து வருகின்றன.''

மல்லாகம் இந்துக்கல்லூரி மண்டபத்தில் மல்லாகம் கிராமசபையினர் தமக்கு அளித்த பிரியாவிடை வைபவத்திற்கு நன்றி தெரிவித்துப் பேசிய உதவி உள்ளூராட்சிஆணையாளர் திரு. எஸ். சி மாணிக்கவாசகர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். இவ்விழாவுக்கு யாழ். மாவட்ட உதவி அரசாங்க அதிபர் திரு ரி. முருகேசம்பிள்ளை தலைமைவகித்தார்.

இவ்விழாவில் செனட்டர் திரு. சு. நடராஜா, திரு. நம. சிவப்பிரகாசம் உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திரு. எஸ்.முருகவேள். வலி. வடக்கு காரியாதிகாரி திரு. பீ. எல். பற்றிக்ஸ் ஆகியோரும் உரையாற்றினர்.

சுன்னாகம் இராமநாதன் கலைக்கல்லூரியினரின் இன்னிசைக்கச்சேரியும் நடைபெற்றது.

## 'நாட்டை எதிர்நோக்கும் பிரச்னைகள்'

உடுப்பிட்டி, புதன்

''இன்றுநாடு பொருளாதார நெருக்கடி என்னும் கோரப் பிடியில் சிக்கித் தவிக்கின்றது. வாழ்க்கைச் செலவு, விலைவாசிகள் எதிர்பாராத அளவிற்கு அதிகரித்துவிட்டன. இதனால் சாதாரண தொழிலாளி மட்டுமல்ல, அரசாங்க உத்தியோகத்தரும் தமது ஊதியத்தைக் கொண்டு வாழ்வை நடாத்த முடியாது கஷ்டமடைந்து வருகின்றனர். இது மட்டுமல்ல வேலையில்லாத் திண்டாட்டமும் தினமும் அதிகரித்துக்கொண்டே வருகின்றது. இப்பிரச்னைதொழிலாளர்கள் மத்தியிலும், சிறுபான்மையினரிடையேயும் அரசாங்கத்தின் மீதுஅதிருப்தியை ஏற்படுத்தியுள்ளது. அரசியல் ரீதியின்படி இன்றைய அரசாங்கம் அதிககாலம் நிலைக்கமுடியாதுஎன்பதை நாட்டுமக்கள் நன்குணர்ந்து விட்டனர் பல இடைத்தேர்தல்களில் அரசாங்கம் தோல்வியுற்றதும் சமீபத்தில்நடைபெற்றநாத்தாண்டிய இடைத்தேர்தலில் சொற்ப வாக்குகளினாலே வெற்றி பெற்றமையும் அரசாங்கத்தின் மீது மக்களுக்குள்ள வெறுப்பையே காட்டுகின்றது. அரசாங்கம் இவற்றை ஒருபாடமாக மனதில் கொள்ள வேண்டும்.''

மேற்கண்டவாறு பருத்தித்துறை, ஐயனார் வீதியில் பருத்தித்துறை சமசமாஜ இளைஞர் கழகப்பொதுக்கூட்டம் கழக இல்லத்தில நடைபெற்ற போது திரு. வீ. கோபால கிருஷ்ணர் பேசுகையில் கூறினார். இக்கூட்டத்திற்கு திரு. அருளானந்தம் தலைமை வகித்தார். வேறுபலரும் பேசினர். புதிய நிர்வாகிகளாகப் பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்:-

தலைவர்: திரு. வீ. கோபாலகிருஷ்ணர், உபதலைவர்: திரு. அருளானந்தம், காரியதரிசி: திரு. சி. கந்தசாமி, உபகாரியதரிசி: திரு. ஏரம்பமூர்த்தி, தனாதிகாரி: திரு. முருகேசு.

## விவசாயிகள் கவலை

உடுப்பிட்டி, புதன்

நீரிறைக்கும் இயந்திரங்களின் உதிரிப் பாகங்களுக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதன் காரணத்தால் விவசாயிகள் மத்தியில் பெரும் கவலை ஏற்பட்டுள்ளது. இதனால் வடமராட்சி விவசாயிகள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

பயிர்களுக்குக் கிணறுகளிலிருந்து நீர்ப்பாய்ச்சுவதற்கு உதவும் தண்ணீர் இறைக்கும் இயந்திரங்கள் பழுதுற்றால் அவற்றைத் திருத்துவதற்காகப் புதிய உதிரிப் பாகங்களைத் தேடி அலைய வேண்டியுள்ளதாம். ஜாப், வில்லியர்ஸ் ஆகிய இருவகை நீரிறைக்கும்இயந்திரங்களினதும் உதிரிப் பாகங்கள் பல கடைகளில் விசாரித்தும் கிடைக்கவில்லையாம். இத்தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதைத் தொடர்ந்து நீரிறைக்கும் இயந்திரங்களின் கூலி அதிகரித்துள்ளதாகவும் தெரிகிறது.

## மாணவர்களுக்கு அதிபர் பாராட்டு

உடுப்பிட்டி, புதன்

வடமராட்சி ஆங்கில ஆசிரியர் சங்கம் நடாத்திய ஜே. எஸ். ஸி. பரீட்சையில் வதிரி தேவரையாளி இந்துக் கல்லூரியிலிருந்து தோற்றிய பதினொரு பரீட்சார்த்திகளில் பத்துப் பேர் சித்தியடைந்துள்ளனர்.

அகில இலங்கைத் தமிழாசிரியர் சங்கம் நடாத்திய 5-ம் வகுப்புப் பரீட்சையில் இக்கல்லூரியிலிருந்து தோற்றிய 23 மாணவர்களில் 21 மாணவர்கள் சித்தியடைந்துள்ளனர். 1-ம், 2-ம் பிரிவில் 13 மாணவர்கள் தேறியுள்ளனர். இம் மாணவர்களுக்குக் கல்லூரி அதிபர் திரு. எம். எஸ். சீனித்தம்பி பாராட்டுக்களைத் தெரிவித்தார்.

## தங்க நகைகளை கண்டுபிடித்தனர்

அளவெட்டி, புதன்

காங்கேசன்துறை தலைமைக்காரியாலய அதிகாரி எஸ். வி. மூர்த்தி தலைமையில் சென்ற பொலிஸ் கோஷ்டியினர் பழை- வீமன்காமத்தைச்சேர்ந்த மூன்று வீடுகளை சோதனையிட்ட போது பல ஆயிரம் ரூபாய் பெறுமதியான தங்க நகைகளைக் கண்டு பிடித்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

## தலைமை ஆசிரியர் அந்தஸ்து உயரும்

உடுப்பிட்டி, புதன்

முன்னர் தலைமை ஆசிரியர்கள் என அழைக்கப்பட்டு வந்த ஆசிரியர்கள் இவ்வருடம் முதல் கனிஷ்ட அதிபர்கள் என அழைக்கப்படுவர்.

அரசாங்கத்தின் பாடசாலைப் புனரமைப்புத் திட்டத்தின் கீழேயே தலைமை ஆசிரியர்களின் பதவி அந்தஸ்தும் கனிஷ்ட அதிபர்களாக உயர்த்தப்பட்டுள்ளது. இவர்கள் கனிஷ்ட பாடசாலைகளின் அதிபராக இருப்பர். இதுசம்பந்தமான சுற்றறிக்கையொன்று சகல பாடசாலைகளுக்கும் கல்வி இலாகாவினால் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

# 'விவசாயிகளின் நிலை உயரவேண்டும்'

உடுவில், புதன்

''விவசாயிகள்தான் ஒரு நாட்டின் முதுகெலும்பாக இருக்கின்றார்கள். இலக்கிய கவிஞர்களும், கலைஞர்களும் அரசியல் தலைவர்களும் விவசாயிகளுக்கு முக்கியமாக மதிப்பளிக்கக் காரணம்விவசாயிகள் தான் அவர்களை வாழவைப்பவர்கள். அரசாங்கம் விவசாயத்துக்கு வேண்டிய பண உதவியோ, உரம், மண்வெட்டி, போன்ற உபகரணங்களையோ விவசாயிகளுக்கு கொடுப்பதால் மட்டும் நம் நாட்டில் விவசாய உற்பத்தி பெருகி விடாது. விவசாயிகளின் வாழ்வு வளரவேண்டும். இன்னமும் அவர்கள் தாழ்ந்த நிலையில்தான் வாழ்கிறார்கள். இந்நிலை மாறிஅவர்களின் நிலை உயரவேண்டும். முதலாளித்துவ நாடுகளிலும் சரி, ஜனநாயக ஜநாடுகளிலும் சரி விவசாயிகள் மதிக்கப்படுகிறார்கள். எனவே தான் அங்கு உணவுக்குப் பஞ்சமில்லை''.

பொங்கல திருநாளன்று மாலை உடுவில் திறந்தவெளியரங்கத்தில் நடைபெற்ற உழவர்விழா, பூரணைக்கலைவிழா நிகழ்ச்சிகளில் கலந்து உரையாற்றிய மயிலை சிவ. சண்முகதாசன் மேற்கண்டவாறு கூறினார்.

கலைவிழா நிகழ்ச்சிகளுக்கு உடுவில் கிராமசபைத் தலைவர் திரு. ச. முத்துலிங்கம் தலைமைவகித்துப் பேசுகையில் கூறியதாவது:

எமது முன்னோர்கள் உணவு, உடைத் தொழில்களுக்கு முக்கியத்துவம் கொடுத்தார்கள். ஆனால் இன்று நாம் உத்தியோக மோகத்தில் அவைகளை மறந்திருக்கிறோம். இதனால் தான் இன்று அந்நிய நாடுகளிடம் பிச்சை கேட்க வேண்டிய அவலநிலைஎமக்கு ஏற்பட்டுள்ளது. இந்நிலை மாறவேண்டுமானால் விவசாய மக்களின் வாழ்க்கைத் தரம் உயரவேண்டும்.

எம்மை வாழவைக்கும் பசு இனத்தைக்கொன்று உணவாக உட்கொள்ளும் நிலை மாறி கொல்லாமை நம்மிடையே நிலைபெறவேண்டும் எதிர்காலத்தில் பெண்கள் உத்தியோக கணவன்மாரை விரும்பாது விவசாய கணவனுக்கு மதிப்பளித்து அவர்களைத் திருமணம் செய்ய முன்வரவேண்டும்.

விழாவில் சிவஸ்ரீ சி. நா. சோமாஸ்கந்த குருக்கள் உட்பட வேறு பலரும் உரை நிகழ்த்தினர்.

விழா ஆரம்பத்தில் நாகஸ்வரக்கச்சேரியும் முடிவில் சுன்னாகம் இளந்தென்றல் மன்றத்தினரின் நாலாவது தயாரிப்பான 'கைகொடுத்த விவசாயி' என்னும் சமூகசீர்திருத்த நாடகமும் நடைபெற்றது.

## மக்கள்கோரிக்கை நிறைவேறியது

உடுவில், புதன்

கந்தரோடை ஸ்கந்தவரோதயா கல்லூரியின் ஆரம்பபிரிவுக்கு1968-ம் ஆண்டுக்கான பிரவேசத்திற்காக கந்தரோடைக் கிராமத்திலுள்ள அநேகசிறுவர்கள் விண்ணப்பம் கோரியிருந்தும் அவர்களின்விண்ணப்பங்கள் காரணமின்றி நிராகரிக்கப்பட்டு பதிலுக்கு வேறுகிராமத்துச் சிறுவர்களின் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்பட்ட முறை குறித்து கந்தரோடை பொதுமக்களும், பெற்றோரும் வடமாநில வித்தியாதிபதியிடம் செய்து கொண்ட முறைப்பாடு வெற்றியளித்துள்ளது.

இப்பிரவேச முறையினால் இக்கிராமத்துப் பிள்ளைகள் வேறு கிராமபாடசாலைகளுக்கு நீண்ட தூரம் நடந்து அலையவேண்டியஅவல நிலை ஏற்பட்டுள்ளதென்றும், இதனைத் தடுத்து இக்கிராமத்துப் பிள்ளைகளுக்கு மேற்படி பாடசாலையில் சேர்ந்து படிக்க அனுமதி வழங்க வேண்டும் என்றும் பொது மக்கள் வடமாநில கல்வியதிகாரி, உடுவில் உம்.பி.,பாடசாலை அதிபர், சுன்னாகம் பட்டினசபைத் தலைவர் ஆகியோரை வேண்டிக் கொண்டனர். இவர்களுடைய இந்த வேண்டுகோள் ஏற்கப்பட்டு இப்பொழுது மேற்படிபாடசாலையின் ஆரம்பபிரிவில் இக்கிராமத்தைச் சேர்ந்த பல சிறுவர்களுக்கு பிரவேச அனுமதி வழங்கப் பட்டுள்ளது.


## ஒரு நற்செய்தி

தமிழிலும் ஆங்கிலத்திலும்
சகலவித அச்சு வேலைகளும்
செய்வதற்கு
ஈழநாடு அச்சகம்
பூரணமான நவீன சாதனங்களைக்
கொண்டுள்ளது என்பதை
மகிழ்ச்சியுடன்
தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

சகலவேலைகளும் திருப்திகரமாகவும்,
சிறப்பாகவும் குறித்த நேரத்தில் செய்து
கொடுக்கப்படும்.

விபரங்களுக்குத் தொடர்பு கொள்ளவும்

**ஈழநாடு லிமிட்டெட்,**
63, சிவன்கோவில் மேற்கு வீதி,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 389


## நாடும் நடப்பும்

கல்லில்லாத நல்ல ஊர்க்குத்தரிசிச்சோறு, பருப்பு கத்தரிக்காய் ,வாழைக்காய் கீரை தக்காளி இப்படி ஏழு கறிவகைகள் கருணைக்கிழங்குக் குழம்பு, ரசம், சொதி மோர், இத்தனைக்கும் மேலாக வடை, பாயாசம் பழம், ஆகா...!

என்ன உங்களுக்கும் நாக்கில் ஜலம் ஊறுகிறதா?

எங்கேயோ ஸ்பெஷலாக எனக்கும் கிடைத்த விருந்துபற்றி நான் அளந்து கொட்டுவதாக நினைக்காதீர்கள். சுமார் இரண்டாயிரம் பேர்வரை இந்த அருமையான சாப்பாட்டை சாப்பிட்டு மகிழ்ந்தனர்.

ஆச்சரியப்படாதீர்கள். அரிசிகிடைக்கவில்லை இடைத்தாலும் பொல்லாதவிலை. கிழங்குக்கும், பருப்புக்கும் கியூ. இந்த நிலையில் இரண்டாயிரம் பேர் வடை பாயாசத்துடன் அருமையான சாப்பாடு சாப்பிட்டார்களென்றால் ஆச்சரியமாகத்தானிருக்கும் ஆனாலும் நான் சொல்வது உண்மை. முழுதும் உண்மை.

முந்தாநாள் பட்டிப் பொங்கல் தினத்தன்று வண்ணை ஸ்ரீ வேங்கடேச வரதராஜப் பெருமான் கோயிலில் இந்த விருந்துபசாரம் நடந்தது. இது இப்பொழுதுதான் புதுமையாக நடைபெற்ற விருந்து அல்ல. வருடாவருடம் தைப்பொங்கலுக்கு மறுநாள் இப்படி வடை பாயாசத்துடன் பல்சுவை உணவு பல்லாண்டுகளாக அளிக்கப்பட்டு வருகிறது மார்கழிமாதம் பெருமாள் கோவிலில் சிறுவர்சிறுமியரின் பஜனையுடன்தான் பிறக்கும். அந்த மாதம் முழுவதும் தினசரி அதிகாலையில் கண்ணன் நாமம் ஒலிக்கும்.

ஃ ஃ ஃ

இரண்டாவது சதிவழக்கு ஆரம்பமாகியிருக்கிறது சதிவழக்கு எதிரிகள் பலத்த பாதுகாப்புடன் நீதிமன்றத்துக்கு கொண்டு வரப்பட்டிருந்தனர். முன்னாள் இராணுவ தளபதியும் எதிரிகளில் ஒருவர் அவர் தளபதியாக இருந்தபோது இப்படி எத்தனை பாதுகாப்பு ஏற்பாடுகளை அவர் செய்திருப்பார்? இன்று அவருக்கே பலத்த பாதுகாப்பு! காலம் எப்படி எப்படியெல்லாம் மாறுகிறது, என்ன என்னவெல்லாம் செய்கிறது.

நாடகமே உலகம் நாளை நடப்பதை யாரறிவார்!

—ஊர்சுற்றி.

## சாரம், துவாய் திருட முயன்றாராம்

உடுப்பிட்டி, புதன்

நெல்யடியிலுள்ள கட்டைவேலி பலநோக்குக் கூட்டுறவுச்சங்க சமாஜத்தின் ஜவுளி விற்பனை நிலையத்தில் சாரம், துவாய் ஆகியவற்றைத்திருட முயன்ற ஒருவர் கையும்மெய்யுமாகப் பிடிபட்டார். அந்நபர் தான் செய்தகுற்றத்தைமன்னிக்குமாறும் இனிமேல் இம்மாதிரிச்செயல்களில் ஈடுபட மாட்டேன் என்றும் சமாஜ அதிகாரிகளிடம் வேண்டியதைத்தொடர்ந்து அவர்கள் அந்நபரை எச்சரிக்கை செய்து விடுவித்தனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'நாடு முழுவதும் இராமத்தைஎதிர்பார்க்கிறது'

## கோப்பாய் எம். பி. கூறுகிருர்

புன்னாலைக்கட்டுவன், புதன்

நாடுமுழுவதும் வாழ்வுக்காக கிராமத்தை எதிர்பார்க்கவேண்டிய நிலைமை உருவாகிவரும் இன்றைய காலகட்டத்தில் உணவுத் துறையில் மட்டுமன்றி, அன்பு, அறிவு, ஆற்றல் ஆகிய துறைகளிலும் கிராமம் நாடு முழுவதற்கும் கலைமேல் விளக்காக மிளிர வேண்டியது அவசியம்.

இவ்வாறு பொங்கல்தினத்தன்று ஊரெழு இளைஞர் விவசாயக் சழகத்தின் ஆதரவில் நடைபெற்றபொங்கல் விழாவுக்குத் தலைமை வகித்துப் பேசிய கோப்பாய் எம். பி. திரு. சி. கதிரவேற்பிள்ளை கூறினுர்.

தொடர்ந்து பேசிய அவர் கூறியதாவது:-

தமிழர் தைத்திருநாளைக் கொண்டாடும் அதே வேளையில் தம்மிடையே நிலவும் சாதிப்பிரிவினைக்களை ஒழித்துக்கட்டவும் சங்கற்பஞ் செய்துகொள்ள வேண்டும் சாதிப்பிரிவினை நீடித்திருக்கும்வரை தமிழ் உரிமைப் போராட்டத்துக்கோ சுதந்திர வாழ்வுக்கோ தகுதியற்றவராவர்.

உரும்பராய் பட்டினசபை உறுப்பினர் திரு. ஏ. காராளசிங்கம் பேசுகையில் இன்னும் மூன்று மாதங்களில் இப்பகுதிக்கு மின்சார வசதிகள் கிடைக்குமென்றும் தொலைபேசி வசதிகள், விளையாட்டிடம் ஆகியன கிடைக்குமென்றும் உறுதி கூறினுர்.

ஊரெழு இளைஞர் விவசாயகழகத்தைச் சேர்ந்த திரு கே. சண்முகநாதன் ஒவ்வொரு கிராமத்திலும் இளைஞர் விவசாயப்பண்ணை உருவாக்கப்படல் வேண்டுமென்றும் எமது சுயதேவையைப் பூர்த்திசெய்ய விஞ்ஞான வழிகளை மேற்கொள்ள வேண்டுமென்றும் கூறினுர்.

திருவாளர்கள் ச. கதிரவேலு, எஸ். தனபாலசிங்கம் சுன்னுகம் பொலிஸ் அதிபர் திரு. எஸ். குணரத்தினு சொக்கலிங்கம், திருமதி இவாணிநாயகம் ஆகியோரும் பேசினர்.

தொடர்ந்து நடைபெற்ற கலை நிகழ்ச்சிகளின் பின் திரு. க. வை. தனேஸ்வரன் நன்றி கூறினுர்.

# 'தமிழினத்தின் எழுச்சி மகாநாட்டில் கண்டோம்'

கொழும்பு, புதன்

வாழ்ந்த தமிழினம்வாழத் துடிக்கும் எழுச்சியை அனைத்துலக மகாநாட்டில் கண்டோம். நமது மொழியின் பெருமையை பிறநாட்டுநல் அறிஞர்கள் எடுத்தியம்பும் போது பெருமையும் பூரிப்பும் அடைந்தோம். திருக்குறள் உலகநீதி நூலாக உயர்ந்த அந்தஸ்தை அடைந்துள்ளதால் அந்நூல் தமிழில் இருப்பதால் தமிழினம் பெருமைப்படுத்தப்பட்டேயாகவேண்டும்.

இவ்வாறு உடுப்பிட்டி எம் பி. திரு. மு. சிவசிதம்பரம் கொழும்பு செட்டியார் தெருவில் நடைபெற்றதைப் பொங்கல் விழாவில் பேசுகையில் கூறினுர்.

திரு. இரா. அதிமணி தலைமையில் நடைபெற்ற இக் கூட்டத்தில் உள்ளூராட்சி அமைச்சர் திரு. எம். திருச்செல்வம் பேசுகையில் அனைத்துலக மகாநாடு பற்றிக் கூறியதுடன் அரசியல் வேறுபாடுகள் அகன்ருல் தான் தமிழினம் சுதந்திரமான வாழ்வையும் சுபீட்சத்தையும் அடையமுடியும் என்ருர்.

செனட்டர் திரு. த. நீதிராசா பேசுகையில் பொங்கல் நாளில் தமிழ் மக்கள் நாவலர் பெருமானுக்கு சிலை எடுக்கத் திடசங்கற்பம் கொள்ள வேண்டுமெனக் கோரினுர்.

முன்னுள் செனட்டர் திரு. மசூர் மௌலாஞு, வித்துவான் சி. சோதிநாதன், பண்டிதர் பரந்தாமன், எம். பாரதமுத்து முதலான பலரும் பேசினர்.

# கத்தியால் வெட்டப்பட்ட நபர் ஆஸ்பத்திரியில் அனுமதி

## சந்தேக நபர் தலைமறைவு

அளவெட்டி, புதன்

சைக்கிளில் சென்றபோது ஏற்பட்ட தகராறு கத்தி வெட்டில் முடிந்த சம்பவம் அல்லாகத்தில் நடைபெற்றுள்ளது.

சம்பவ தினத்தன்று மாலை பசுபதி, சித்தன் என்பவர் சைக்கிளில் ஒழுங்கையால் சென்று கொண்டிருக்கும் போது அவ் ஒழுங்கையால் வந்த சின்னத்துரை அமிர்தலிங்கம் என்பவர் எதிரே வந்த சித்தனுடன் மோதியதைத் தொடர்ந்து சித்தன் என்பவருக்கும் பிரஸ்தாப நபரான அமிர்தலிங்கத்திற்கும் இடையில் ஏற்பட்ட தகராறு காரணமாக சித்தன் தன்னிடமிருந்த கத்தியால் அமிர்தலிங்கத்தின் முதுகில் வெட்டிவிட்டு ஓடிவிட்டதாக கூறப்படுகிறது.

சந்தேக நபரான பசுபதி சித்தன் தலைமறைவாகி விட்டார். சுன்னுகம் பொலிசார் புலன்விசாரணைசெய்து வருகின்றனர்.

கத்தி வெட்டுக்கு இலக்கான அமிர்தலிங்கம் அரசினர் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

## இலங்கை ஒலிபரப்பு கூட்டுத்தாபனம்

**வியாழன் 18-1-68**

செய்திகள்: காலை 7-00, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00.

**364 மீற்றர் & 61 மீற்றர்**

6-30 நாதாஞ்சலி, 6-35 சைவநற்சிந்தனை 6-40 இஸ்லாமிய நற்சிந்தனை, 6-45 பக்திப்பாடல்கள், 7-25 தினக்குறிப்பு 7-30 குரல்வகை, 8-00 இசைவேளை, 8-15 இஸ்லாமியகீதங்கள்.

**364 மீற்றர் & 49 மீற்றர்**

பகல் 12-00 சித்திரகானம், 1-00 கதம்பஇசை.

**364 மீற்றர் & 61 மீற்றர்**

மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-30 குரல்வகை

இரவு 6-15 தாளவாத்யக்கச்சேரி, 6-45 பாவளம், 7-00 கிராமசஞ்சிகை, 7-30 விவாத மேடை, 8-00 முஸ்லிம்நிகழ்ச்சி, 9-30 இசைக்கச்சேரி — எம். ஏ. கல்யாணகிருஷ்ணபாகவதர்.





எப்பயிர்க்கும் உய்வுண்டாம் உய்விலை அப்பயிர்க்கு 'ஷெல்' பூச்சி நாசினி பயனை பாவிக்காரெனில்.

AGENTS

# றோயல் டிஸ்பென்ஸறி

PHONE 397 JAFFNA


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ். உதைபந்தாட்ட சங்கபோட்டி

# குருநகர் கோஷ்டி சண்டிலிப்பாயை தோற்கடித்தது

யாழ்ப்பாணம், வியா.

யாழ்ப்பாணம் உதைபந்தாட்டச் சங்கத்தின் ஆதரவில் யாழ். விளையாட்டரங்கில் நடைபெற்றுக்கொண்டிருக்கும் யாழ் மாவட்ட கழகங்களுக்கிடையேயான 'ஏ' பிரிவு 'பி' பிரிவு உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியில் சண்டிலிப்பாய் 'கிருஸ் கொப்பேஸ்' விளையாட்டுக் கழகத்துக்கும் குருநகர் 'யுத் கவுன்சில்' விளையாட்டுக்கழகத்துக்கும் இடையே நடைபெற்ற உதபந்தாட்ட மோதலில் குருநகர் கோஷ்டி 4-1 கோல்களால் சண்டிலிப்பாய் கோஷ்டியை வெற்றியீட்டியது.

ஆரம்பத்தில் இருந்து முடிவு வரையும் ரசிப்பாகக் காணப்பட்ட இப்போட்டியில் இரு கோஷ்டியினருமே நன்றாக ஆடி ரசிகர்களை உற்சாகப் படுத்தினர். இடைவேளைக்கு முன்னர் நடைபெற்ற போட்டியில் இரு பகுதியினரும் ஒருவரையொருவர் விட்டுக்கொடுக்காமல் பெரும் பலப் பரீட்சையில் ஈடுபட்டனர். இதனால் இடைவேளையின் போது இரு சாராரும் தலா ஒரு கோல் பெற்றுக் கொண்டனர்.

இடைவேளைக்குப் பின்னர் நடைபெற்ற மோதலில் குருநகர் கோஷ்டியில் நல்ல முன்னேற்றம் காணப்பட்டது. சுறுசுறுப்புடன் நல்ல 'பாசிங்' செய்து அடுத்தடுத்து மின்னல் வேகத்தில் கோல்களை விளாசத் தொடங்கினர். எனினும் சண்டிலிப்பாய் தனது முழுப் பலத்துடன் கட்டத்துக்குக் கட்டம் அருமையான பதிலடிகள் கொடுத்தது பாராட்டத்தக்கது.

குருநகர் ஐக்கிய விளையாட்டுக் கழகத்தின் 'பி' பிரிவுக்கும் சென். ஜோசப் விளையாட்டுக் கழகத்துக்கும் இடையே நடைபெற்ற மற்றொரு போட்டியில் இரு கோஷ்டியினரும் சம பலத்துடன் மோதிய காரணத்தினால் இரு சாராரும் தலா 3-3 கோல்களைப் பெற்று வெற்றிதோல்வியின்றி ஆட்டத்தை முடித்தனர்.

இப்போட்டியின் கடைசிக் கட்டங்கள் மிகவும் விறுவிறுப்பாகவும், சுறுசுறுப்பாகவும் காணப்பட்டன. இரு கோஷ்டியினரும் நன்றாக ஆடி நல்லதொரு ரசிப்பான மோதலை ரசிகர்களுக்கு அளித்தனர். இப்போட்டிகளுக்கு முறையே திரு. ஞானப்பிரகாசம், திரு. எல். சி. நிக்கலஸ் ஆகியோர் மத்திஸ்தம் வகித்தனர். [வி நி]

உதைபந்தாட்டம்

# சென். ஆன்ஸாக்கு வெற்றிக்கேடயம்

சங்கானை, புதன்

வலிகாமம் மேற்கு உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டி முதலாம் பிரிவு இறுதிக் கேடயத்திற்கான போட்டி இளவாலை சென் ஹென்றி விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றது.

இளவாலை சென்ஆன்ஸ் விளையாட்டுக்கழகமும் சுதுமலை நாவலர் விளையாட்டுக் கழகமும் மோதிக்கொண்டன.

நாவலர் கழகத்தார்க்கு பல சந்தர்ப்பங்கள் கிடைத்தும் அவற்றை இழக்கவே சென் ஆன்ஸ் கழகம் 2—1 கோல்களால் வெற்றியீட்டியது. மத்தியஸ்தராக திரு. எல். கே. டி. மகினராசா கடமையாற்றினர்.

பண்டைத்தரிப்பு எம்.பி. சி. எஸ். யூனியனால் அளிக்கப்பட்ட வெற்றிக்கேடயத்தை வணக்கத்திற்குரிய இ. எ. பெஞ்சமின் வெற்றியீட்டிய கோஷ்டிக்கு வழங்கினார்.

13 கழகங்கள்

## பங்குபற்றும் போட்டி

வல்வெட்டித்துறை, புதன்

பருத்தித்துறை யுனைற்றெட் விளையாட்டுக்கழக உதைபந்தாட்ட சுற்றுப் போட்டி கடந்த வாரம் தொடக்கம் நாவலர் அரங்கில் ஆரம்பமாகி தொடர்ந்து நடைபெற்றுவருகின்றது.

பொ. வீரவாகு வெற்றிக்கேடயத்துக்கான இப்போட்டியில் பதின்மூன்று கழகங்கள் பங்குபற்றிவருகின்றன.

வெற்றிபெறும் கழகத்திற்கு யாழ்ப்பாணபொலிஸ் அதிபர் இ. சுந்தரலிங்கம் பரிசில்களை வழங்கவிருக்கிறார்.

# நெல்லியடி 'ஸ்பேஸ்' சாம்பியனாகியது

உடுப்பிட்டி, புதன்

அல்வாய் மனோகரா விளையாட்டுக்கழகத்தினரால் நடாத்தப்பட்டுவரும் 4-வது ஆண்டு உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியில் நெல்லியடி ஸ்பேஸ் விளையாட்டுக் கழகம் சாம்பியனாகத் தெரிவுசெய்யப்பட்டுள்ளது. இச் சுற்றுப்போட்டியின் பிரிவுச் சாம்பியன்களாக அல்வாய் மனோகரா விளையாட்டுக்கழகமும், நெல்லியடி ஸ்பேஸ் விளையாட்டுக் கழகமும், புத்தூர் வீனஸ் கோஷ்டியும் தெரிவு செய்யப்பட்டன. இச் சுற்றுப்போட்டியில் 15 விளையாட்டுக்கழகங்கள் பங்குபற்றின.

நெல்லியடி ஸ்பேஸ் விளையாட்டுக்கழகத்திற்கும் புத்தூர் வீனஸ் கோஷ்டியினருக்குமிடையே ஏற்பட்ட இறுதித் தெரிவுப்போட்டியில் இரு கோஷ்டிகளும் தலா ஒரு கோல் வீதம் போட்டதால் போட்டி வெற்றிதோல்வியின்றி முடிவடைந்தது. போட்டி ஆரம்பமானதும் இரு கோஷ்டியினரும் சுறுசுறுப்பாக விளையாடத்தொடங்கினர்.

இடைவேளைக்கு சற்று முன்னர் இரு தரப்பினரும் கடும் மோதலுக்கிடையே ஒவ்வொரு கோல்களைத் தமது கோஷ்டிக்கு விளாசினர். இடைவேளையின் பின்னர் போட்டி போராட்டக்கத் தொடங்கியது. விளையாட்டிடையே உற்சாகம் [illegible] காணப்பட்டதினால் இரு கோஷ்டியினரும் ஒரு கோல் களேனும் உதைக்கமுடியாது திணறினர். இதனைத் தொடர்ந்துபோட்டி அமைப்பாளர்கள் புள்ளிவிபரங்களின்படி நெல்லியடி "ஸ்பேஸ்" விளையாட்டுக் கழகம் இவ்வருட அல்வாய் மனோகரா விளையாட்டுக் கழக உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டிச் சாம்பியனாகத் [illegible] தாக அறிவித்தனர்.

# கொழும்புக் கோஷ்டி வென்றது

சங்கானை, புதன்

கொழும்பு மோர்னிங் ஸ்டார் விளையாட்டுக் கழகத்திற்கும் பண்டத்தரிப்பு சங்கிலியன் விளையாட்டுக் கழகத்திற்குமிடையே நடைபெற்ற சிநேகபூர்வமான உதைபந்தாட்டப் போட்டியில் கொழும்பு மோர்னிங் ஸ்ரார் 2—1 கோல்களால் வெற்றியீட்டியது.

பண்டத்தரிப்பு இந்துக் கல்லூரி விளையாட்டு மைதானத்தில் நடைபெற்ற இப்போட்டிக்கு திரு. தி வ அரியரத்தினம் மத்தியஸ்தம் வகித்தார்.

## விளையாட்டுக்கழக உறுப்பினர்

சுழிபுரம், புதன்

சுழிபுரம் சூட்டிங்ஸ்டார் கழக வருடாந்தப் பொதுக் கூட்டம் சங்கத் தலைவர் திரு. செ. பேரின்பநாயகப் தலைமையில் நடைபெற்ற போது கடந்த ஆண்டு நடைபெற்ற போட்டிகள் பலவற்றில் கழகம் கலந்துகொண்டு பல பரிசுகள்பெற்றமை குறித்து பாராட்டுக்கள் தெரிவிக்கப்பட்டன.

பின்னர் நடைபெற்ற நடப்புவருட நிர்வாகிகள் தெரிவில் பின்வருவோர் தெரிவுசெய்யப்பட்டனர்.

போஷகர்கள்: வை. இராசசுந்தரம், வே. நாகராசா, கா. அரிச்சந்திரா, எஸ் செல்வராசா, தலைவர் திரு. செ. பேரின்பநாயகம், உபதலைவர்: க. இந்திராசா, காரியதரிசி: ச. ஜெகதீசன்: உபகாரியதரிசி: தா. முருகேசம்பிள்ளை, தனாதிகாரி: சி. இராமச்சந்திரன், நிர்வாகசபை உறுப்பினர்கள்: சு. நித்தியானந்தன், ஆ. செல்லத்துரை, தா. இரத்தினவேல், செ. அரியகுட்டி, வெ. வெங்கடேஸ்வரன், கி. சிவசிதம்பரம்.

## 14 கழகங்கள் வெளிநடப்பு

யாழ்ப்பாணம், வியா.

யாழ் உதைபந்தாட்டச் சங்கத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டம் சென்ற கிழமை யாழ். மத்தியகல்லூரி மண்டபத்தில் நடைபெற்றபோது, இச்சங்கத்தில் அங்கம் வகிக்கும் பல விளையாட்டுக் கழகங்களுக்கு அன்றையக் கூட்டத்தில் "வாக்குரிமை" மறுக்கப்பட்டதால் கூட்டத்தை விட்டு 14 விளையாட்டுக் கழகங்கள் வெளியேறின.

வெளியேறிய கழகங்கள் யாழ். உதைபந்தாட்டச் சங்க உபதலைவரின் தலைமையில் மற்றொரு இடத்தில் கூடி தாம் கூட்டத்தை விட்டு வெளியேறியதற்கான காரணத்தை விளக்கினார்கள்.

வெளியேறிய கழகங்கள் அனைத்தும் ஏகமனதாக ஒரு மகஜர் தயாரித்து கையொப்பம் இட்டு இலங்கை உதைபந்தாட்டச்சங்கத்துக்கு அனுப்பியுள்ளன.

## அராலி வென்றது

அராலி, புதன்

அராலி மாவத்தை விளையாட்டுக்கழக கோஷ்டியினருக்கும் நவாலிகழககோஷ்டியினருக்குமிடையே நடைபெற்ற உதைபந்தாட்ப் போட்டியில்அராலி கோஷ்டியினர் 6—0 கோல்களைப் போட்டு வெற்றியீட்டினர்.

# செய்தித் திரட்டு

### காருக்கு பலி

அம்பாந்தோட்டையில் வீதியருகே இளநீர் விற்றுக்கொண்டிருந்த பழனி அம்மா என்ற 48 வயது பெண்ணும் அவரருகேஇளநீர் குடித்துக்கொண்டிருந்த தர்மபாலா என்ற 11 வயது சிறுவனும் ஒரு காரினால் மோதுண்டு ஸ்தலத்திலேயே மரணமானார்கள். சிறுவனுக்கு அருகே நின்ற அவனது தாயாரும் பலமாக காயமடைந்து அம்பாந்தோட்டை ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டார்.

### கடத்தல் முயற்சி

நூறுரூபா இந்திய கரன்சி நோட்டை கடத்திச்செல்ல முயன்றவர் சுங்க அதிகாரிகளிடம் சிக்கிக்கொண்டார். அவருக்கு 300 ரூபா அபராதம் விதிக்கப்பட்டது. தலைமன்னார் கப்பல் இறங்குதுறையில்இச்சம்பவம்நடைபெற்றது இந்தியா செல்வதற்காக கொழும்பிலிருந்து வந்த பிரயாணியொருவரை சுங்க அதிகாரிகள் சோதனை போட்டபோது அந்தப் பிரயாணி கொண்டு வந்த பாக்குபொட்டலத்துக்குள் 100 ரூபா நோட்டு ஒன்று மறைத்து வைக்கப்பட்டிருந்ததை சுங்க அதிகாரிகள் கண்டுபிடித்தனர்.

### மயானத்தில் புதைத்தனர்

காலிவீதியில் ஓடிக்கொண்டிருந்த மோட்டார் ஒன்று தடல்லை என்னுமிடத்திலுள்ள பொதுமயானத்திற்கு அருகாமையில் திடீரென நிறுத்தப்பட்டது. மோட்டாரில் பிரயாணம் செய்த மூவர் பிரேதமொன்றை அடக்கம்செய்து விட்டுசென்றனர்.

இதைகவனித்துக் கொண்டிருந்த ஒருவர்காலிபொலிசுக்கு அறிவித்தார். பொலிசார் மயானத்துக்கு விரைந்தனர். புதைக்கப்பட்டிருந்த பிரேதத்தைதோண்டிப் பார்த்தபோது அது இறந்த நாய் ஒன்றென்பதை பொலிசார் கண்டு ஏமாந்தனர்.

### இருபது லட்சம்

வடமத்திய, வடமேற்கு மாகாணங்களில் தற்பொழுது பரவிவரும் மலேரியா நோயைக் கட்டுப்படுத்தச் சுகாதார அமைச்சு அரசாங்கத்திடமிருந்து இரு துலட்சம் ரூபாநிதிகோரியுள்ளது மலேரியா நோய்பரவாமல் தடுப்பதற்கும், இந்நோயினால் பீடிக்கப்பட்டவர்களை குணப்படுத்துவதற்குமென நாடெங்கிலும் 25மலேரியா தடுப்பு நிலையங்களை நிறுவ இப்பணம் பயன்படுத்தப் படும்.

### முட்டையின் விலை குறைந்தது

கடந்த வாரத்தில் எதிர் பார்த்தபடி உணவுப்பொருட்களின் விலையில் வெகுவாக வீழ்ச்சி காணப்பட்டுள்ளது. முட்டைவிலையில் சுமார் 9 சதம்வீழ் சிகாணப்பட்டுள்ளது. முட்டைவிலை தொடர்ந்து வீழ்ச்சியடையுமென எதிர்பார்க்கப்படுகிறது.

2ரூபாவிற்கும் 1.80 சதத்திற்குமிடையில் விற்கப்பட்ட ஒரு இருத்தல் தக்காளிப்பழம் தற்பொழுது பொதுச் சந்தையில் 60சதத்திற்கும் 1 ரூபாவிற்குமிடையில் விற்கப்படுகிறது பச்சை மிளகாயின் விலையிலும்வெகுவாக வீழ்ச்சிகாணபபட்டுள்ளது

### பத்துவ டிவீடுகள்

இலங்கைஹோட்டல் கூட்டுத்தாபனம் நாட்டின் பல்வேறுஇடங்களிலும், மொத்தமாகப் பத்துவாடிவீடுகளை நிறுவுவதற்கு திட்டமிட்டுள்ளது. யாழ்ப்பாணம், திருகோணமலை, நீர்கொழும்பு பதுளை, நுரளை முதலிய இடங்களில் கட்டப்படவிருக்கும் வாடிவீடுகள், உல்லாசப் பிரயாணச் சபையினால் நடத்தப்படவிருக்கும் வாடிவீடுகளுடன் ஒத்துழைத்தே இயங்க விருக்கின்றன

### முன்னணிகிளைகள்

இஸ்லாமிய சோஷலிஸ முன்னணி கிளைகள் மன்னார் மாவட்டத்தில் எருக்கலம்பிட்டி, மன்னார், தாராபுரம் குண்டு, விடத்தல் தீவு, பெரியமடு, மறுச்சுக்கட்டி வேப்பங்குளம், பொற்கேணி, சிலாவத்துறை, முசலி, பண்டாரவெளி ஆகிய கிராமங்களில் நிறுவப்படுமென தெரிய வருகிறது. கூட்டத்தின் முக்கிய பேச்சாளராக செனட்டர் ஹமீம் ஜனுப் எச். எம். பி. முகையதின் கலந்து கொள்வார்கள்,

### தட்டுப்பாடு நீங்கியது

கிழக்கு மாகாணத்தின் பெருந்தொகையான முஸ்லிம் பாடசாலைகளில் நீண்டகாலமாக நிலவி வந்த ஆசிரியர்கள் தட்டுப்பாடு தற்பொழுது நீங்கியுள்ளது. கடந்த வருடம் அளுத்கம பெண்கள் ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியில் பயிற்சி பெற்று வெளியேறிய பெரும்பாலான முஸ்லிம் பெண்கள்கிழக்கு மாகாணப் பாடசாலைகளில் நியமிக்கப்பட்டுள்ளனர்.

### சரஸ்வதி கலாமன்றம்

கன்னியாவில் சரஸ்வதி கலாமன்றம் ஒன்று அங்குரார்ப்பணம் செய்யப்பட்டுள்ளது. பாதர் முன்னேற்றச் சங்க ஆதரவில்மன்றஆரம்ப விழா நடைபெற்றது. மன்றத் தலைவராக டாக்டர் இரா சிவ அன்பு தெரிவு செய்யப்பட்டார். செயலாளராக திருமதி ஐ. ருக்மணி பொருளாளர் திருமதி. க. சுகிர்தமலர் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர்.

## 'கிறீன்பீலட்' கழக வருடாந்தக் கூட்டம்

யாழ்ப்பாணம், புதன்

யாழ்ப்பாணம் "கிறீன் பீல்ட்" விளையாட்டுக்கழகத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டம் தலைவர் திரு. பி. எஸ். சேவியர் தலைமையில் கழக மண்டபத்தில் நடைபெற்றது. 1968-ம் ஆண்டு உத்தியோகத்தர்களாகப் பின்வருவோர் தெரிவு செய்யப் பட்டனர்.

போஷகர்கள்: திரு. சி. எக்ஸ். மாட்டின் [இளைப்பாறிய நீதவான்[, திரு. கட்சன் செல்வராசா [யாழ். உள்ளூராட்சி ஆணையாளர்], வண. பிதா. மைக்கேல் யோசேப் [சென். பற்றிக்ஸ் கல்லூரி], திரு ஜி நல்லையா [மாஜி செனட்டர்], தலைவர்: திரு. பீ. எவ். சேவியர், உபதலைவர்கள்: திரு. யாகோபு, திரு. யோ. துரைராசா, திரு. அருளானந்தம், திரு. எஸ். ஜே. அந்தனி, செயலாளர்: திரு. எம். டி. தம்பிராஜா, உப செயலாளர்: திரு. ஜி. வி. அருமைநாயகம், தனாதிகாரி: திரு. எஸ். லீனப்பு. விளையாட்டுக்காரியதரிசி: திரு. எஸ். ஏ. கிறிஸ்டியன், விளையாட்டு உபகாரியதரிசி: திரு. சில்வஸ்டர், கணக்குப் பரிசோதகர்: திரு. விக்டர் அந்தனி.

திருவாளர்கள்: கிறகெறி, கில்பேட், அல்பேட், கனகலிங்கம், இம்மனுவேல், சிவபாலன், எம். அந்தனி ஆகிய 7 பேரைக்கொண்ட குழுவும் தெரிவு செய்யப் பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உருத்திரபுரம் காவல்காரர் படுகொலை

# குடும்ப நண்பர் இராசரத்தினம் பொலிஸில் சரணடைந்தார்

## இம்மாதம் 20-ம் தேதிவரை ரிமாண்ட்; பொலிஸார் தொடர்ந்து விசாரணை

சவாகச்சேரி, வியாழன்

உருத்திரபுரம் காவல்காரர் கொலைவழக்கு சம்பந்தமாக கடந்த 20 நாட்களாக பொலிசாரினுல் தேடப்பட்டு வந்த இராசத்தினம் என்ற வாலிபர் நேற்று கிளிநொச்சி பொலிஸில் சரணடைந்தார்.

கடந்த மாதம் 27-ந் திகதி இரவு பரந்தன் சோடா தொழிற்சாலை காவல்காரரான ஆசைப்பிள்ளை [வயது 48] படுக்கையில் வைத்து தலை வேறு உடல் வேருக படுகொலை செய்யப்பட்டதும், இதுசம்பந்தமாக சந்தேகத்தின் பேரில் அவரது மனைவி செல்லம்மா [வயது 35] கைது செய்யப்பட்டதும் வாசகர்கள் அறிந்ததே.

### தலைமறைவாக இருந்தார்

செல்லம்மாவின் குடும்ப நண்பரென சந்தேகிக்கப்பட்ட வட்டுக்கோட்டையைச் சேர்ந்த வாலிபரான இராசரத்தினத்தை [வயது 32) பொலிசார் வலைபோட்டு தேடி வந்தனர். இதுவரை அவர் பொலிசாரிடம் சிக்காமல் தலைமறைவாக இருந்து வந்தார் என்று கூறப்படுகிறது.

### டிராக்டர் சாரதி

பொலிஸில் சரணடைந்த இராசரத்தினம் நீண்டகாலமாக கொலையுண்டவரின் குடும்பத்துடன் தொடர்புடையவரென்றும், அவர் ஒரு டிராக்டர் சாரதியென்றும், உருத்திரபுரம் 10-ம் வாய்க்காலில் வசித்து வந்தாரென்றும் கூறப்படுகிறது.

### 20-ந் திகதி வரை ரிமாண்ட்

பொலிஸில் சரணடைந்த இராசரத்தினத்தை கிளிநொச்சி பொலிஸ் இன்ஸ்பெக்டர் திரு. பி. இராஜேஸ்வரன், பருத்தித்துறை மாஜிஸ்டிரேட் திரு. கே. விக்னராசா முன்னிலையில் ஆஜர் செய்தார். மாஜிஸ்டிரேட் சந்தேக நபரான இராசரத்தினத்தை இம்மாதம் 20-ந் திகதி வரை ரிமாண்டில் வைக்கும்படி உத்தரவிட்டார்.

### மாஜிஸ்டிரேட் முன்னிலையில்

சாவகச்சேரி மாஜிஸ்டிரேட் முன்னிலையில் இம்மாதம் 20-ந் திகதி கொலையுண்டவரின் மனைவி செல்லம்மா ஆஜர் செய்யப்படுவார். அன்று இராசரத்தினமும் ஆஜர் செய்யப்படுவார் எனத் தெரிய வருகிறது.

### பெரிய தகப்பன் வீட்டில்

கொலையுண்ட ஆசைப்பிள்ளையின் புதல்வர்களான செல்வராசா [வயது 17], கணேசரத்தினம் [வயது13] ஆகிய இருவரும் தற்பொழுது கிளிநொச்சியில் பெரிய தகப்பனுடன் வாழ்ந்துவருவதாகத் தெரிய வருகிறது.

### கத்தியும், கோடரியும்

கொலை நடந்த இடத்தில் பொலிசார் கண்டெடுக்கப்பட்ட இரத்தக்கறை படிந்த கத்தியும், கோடரியும் பரிசோதனைக்காக அரசாங்க ரசாயன பரிசோதகருக்கு அனுப்பப்பட்டுள்ளன.

### புலன் விசாரணை

இக்கொலை சம்பந்தமாக கிளிநொச்சிப் பொலிசார் தொடர்ந்து புலன்விசாரணை செய்து வருகின்றனர்.

---

## இஸ்ரேல் பிரதமர் எஷ்கோல் லண்டன் வந்து சேர்ந்தார்

லண்டன், ஜன. 17

இஸ்ரேலியப் பிரதமர் திரு. எஷ்கோல், லண்டன் வந்துள்ளார். அமெரிக்கா சென்றுவிட்டுத் தமது நாடு திரும்பிச்செல்லும் வழியில் அவர் இங்கு ஒரு குறுகிய விஜயத்தில் வந்து சேர்ந்தார்.

அவர் நிருபர்களிடம் பேசுகையில், மேற்கு ஆசிய பிரச்னைபற்றிப் பொதுவாகத் தாம் பிரிட்டிஷ் தலைவர்களுடன் பேசவிருப்பதாகக் கூறினார்.

### மறுத்தார்

பிரிட்டனிடம் போர்விமானங்கள் வாங்குவதுபற்றி அவர் ஆராய வந்துள்ளார் என்ற செய்திகளை அவர் மறுத்தார்,

மேற்குஆசியப் பிரச்னைக்கு ஒரு தீர்வு காணுமுகமாகக் கெயிரோ சென்று, ஐக்கிய அரபுக் குடியரசு ஜனதிபதி நாசரைச் சந்தித்துப் பேசத் தாம் தயாராயுள்ளதாக திரு. எஷ்கோல் மீண்டும் வலியுறுத்தினர்.

---

## சீதனம் தரமறுத்ததால் மகள் தற்கொலை முயற்சி

அளவெட்டி, புதன்

தற்கொலை செய்ய எத்தனித்த இரு பிள்ளைகளின் தாயான சத்தியபாமா [20 வயது] என்னும் இளம் பெண்ணை அவரின் தாயார் சிரமயோகம் காப்பாற்றிய சம்பவம் அளவெட்டிவடக்கில் நிகழ்ந்துள்ளது.

''சத்தியபாமாவின் விவாகத்துக்கு சீதன நகை தருவதாக இவரின் தாயார் உறுதி கூறியிருந்தும் விவாகம் முடிந்து இருபிள்ளைகளுக்குத் தாயாகியபின்பும்சீதனநகை தரமறுத்தகாரணத்தால் சத்தியபாமா மனமுடைந்து தமது சமையலறை முகட்டு வளையில் கழுத்தில்சுருக்கிட்டுத் தற்கொலை செய்ய முயற்சித்தபோது தக்க சமயத்தில் தாயார் தமது மகளை தற்கொலையிலிருந்து காப்பாற்றியதாக சுன்னுகம் பொலிசாரின் விசாரணையில் தெரிய வந்துள்ளது.

தற்கொலை செய்ய எத்தனித்ததாகக் கூறப்படும் சத்தியபாமா மீது சுன்னுகம் பொலிசாரால் மல்லாகம் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டிருக்கிறது.

---

## முட்கம்பி இலவச விநியோகம்

வவனியா, புதன்

வவனியா மாவட்டத்தில் உள்ள சகல விவசாயம் செய்யும் பாடசாலைகளுக்கும் அதனை ஊக்குவிக்கும் பொருட்டு மண்வெட்டி, கைமுள்ளு ஆகியவற்றுடன் முட்கம்பியும் இலவசமாக விவசாயப்பகுதி விநியோகம் செய்துவருகிறது.

இத்திட்டத்தை வவனியா மாவட்ட விவசாய விஸ்தரிப்பு அதிபர் திரு. பொ. மாணிக்கவாசகர் நன்முறையாகச் செய்வித்துவருகின்ருர். இத்திட்டத்தில் வவனியாப் பகுதியில் உள்ள பல பாடசாலைகள் அதிகமான பகுதி நிலத்தைப்பண்படுத்தி மேட்டுநிலப்பயிர் உற்பத்திக்கான பூர்வாங்க வேலைகளில் ஈடுபட்டுள்ளன.

---

## ரூபா 750 அபராதம்

குரும்பசிட்டி, புதன்

உரும்பராய் வாசியான மனுவேல்பிள்ளை தியாகலிங்கம் என்பவர் தமது வீட்டில் 1580 ரும் கோடா வைத்திருந்ததாக சுன்னுகம் பொலிசாரால் கைதுசெய்யப்பட்டு மல்லாகம் மாஜிஸ்திரேட் திரு. எம். சண்முகலிங்கம் முன்னிலையில் ஆஜர்செய்யப்பட்டார்.

இவர் தமது குற்றத்தை ஒப்புக்கொண்டதன் பேரில் மாஜிஸ்திரேட் எதிரிக்கு ரூபா 750 அபராதம் செலுத்துமாறு உத்தரவிட்டு தீர்ப்பளித்தார்.

---

## தீவுப் பகுதி மக்கள் கஷ்டம்

ஊர்காவற்றுறை, புதன்

தீவுப்பகுதியில குறிப்பாக புளியங்கூடல், நாரந்தனைப் பகுதிகளில் உள்ள கடைகளில் உப உணவுப்பொருட்களைப்பெறமுடியாக நிலை ஏற்பட்டுள்ளது

சில கடைகளில், கூடிய விலைகொடுத்து பொருட்களைப் பெறவேண்டிய நிலையேற்பட்டுள்ளது.

---

## பிரதம மந்திரி

[1-ம் பக்க தொடர்ச்சி]

களில் எல்லா மந்திரிகளும் கலந்து கொள்வார்கள் என்றும் தெரியவருகிறது.

தமிழரசுக்கட்சித் தலைவர் திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகம், நல்லூர் எம். பி. டாக்டர் ஈ. எம். வி. நாகநாதன் ஆகியோர் நாளை கல்முனைக்கு செல்கின்றனர்.

அடுத்தவாரம் பிரதம மந்திரியுடன் [illegible] மந்திரி திரு. எம். திருச்செல்வமும் கல்முனைக்குச் செல்வார்.

---

## எஸ். ஜே. வி. தலைமையில் சந்தித்தனர்

யாழ்ப்பாணம், வியா.

கொழும்பு நகரில் 450 தமிழ் பிள்ளைகளுக்கு பாடசாலைகளில் இடம்கிடைக்கதாம் ஒழுங்குகள் மேற்கொண்டுள்ளதாகக்கொழும்பு மாநில வித்தியாதிபதி திரு. பி. பி. எம். சேனநாயகா அவரைச் சந்தித்த தமிழர் கல்வி நல அபிவிருத்திச் சங்கத் தூதுகோஷ்டியினரிடம் தெரிவித்தார்.

தமிழரசுக்கட்சித் தலைவர் திரு எஸ். ஜே. வி செல்வநாயகம் தலைமையில் சென்ற இத்தூது கோஷ்டியினர் தெகிவளை பிறெஸ் பிரேறியன் மகளிர் கல்லூரியில தமிழ் பிரிவை அகற்ற முயற்சிகள் மேற்கொள்ளப்படுவது பற்றிச் சுட்டிக்காட்டினர்.

---

## சேக்கிழார் மன்ற உறுப்பினர்

யாழ்ப்பாணம், புதன்

அகில இலங்கை சேக்கிழார் மன்ற வருடாந்தக் கூட்டம் யாழ். இந்துக்கல்லூரிமண்டபத்தில் மன்றத் தலைவர்திரு. ம. ஸ்ரீகாந்தா தலைமையில் நடைபெற்றது. செயலாளர்அறிக்கைபொருளாளர் அறிக்கை ஆகியவை சபையாரால் அங்கீகரிக்கப் பெற்றன அதன்பின் கீழ்க்காணும் செயற் குழுவினர் ஏகமனதாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர். திரு. ஸ்ரீகாந்தா, துணைத்தலைவர்கள். திருவாளர்கள்ந சபாரத்தினம்,மு ஞானப்பிரகாசம், மு. வைரமுத்து,வைத்தியகலாநிதி வ. த பசுபதி, சி. விசுவலிங்கம் சோ இராசரத்தினம், முதலியார் செ.முத்துத்தம்பி,எஸ். யு. சோமசேகரம், செயலாளர் பண்டித வித்துவான் க.கிநடராஜன், துணைச்செயலாளர்கள் திருவாளர்கள் க.சொக்கலிங்கம்சு.பரநிருபசிங்கம், க.கணபதிப்பிள்ளை, பொருளாளர் திரு.ச செல்வராஜா, துணைப் பொருளாளர்கள் திருவாளர்கள் செ. முத்துக்குமாரசாமி, புலவர் சி.த. சோமசுந்தரம், கலைப் பொறுப்பாளர்திரு. இ.மகாதேவா,

செயற்குழு உறுப்பினர். திருவாளர்கள் அ தில்லையம்பலம்ஜே பி. க,சிவராமலிங்கம், திருவே.சதாசிவம், திரு. க. சுப்பிரமணியம், திரு பொன்னுத்துரை, த. குமாரசாமிப் புலவர், க.சி. குலரத்தினம், மூ.வைத்திலிங்கம் பண்டிதர் வேலுப்பிள்ளை, கணக்குப் பரிசோதகர் திரு. ப.முத்துக்குமாரசாமி.

திரு. எஸ். சிவஞானத்தைத்தலைவராகவும், திரு. செ. முத்துக்குமாரசாமியைச் செயலாளராகவும், திருவாளர்கள் ச. செல்வராசா, ந. சபாரத்தினம், சோ இராசரத்தினம், மு வைரமுத்து, கே. சதாசிவம் ரி.முருகேசபிள்ளை, இ.வைத்திலிங்கம், எஸ். விசுவலிங்கம்,முதலியார்செ முத்துத்தம்பி ஆகியோரை உறுப்பினராகவும் கொண்ட ஒரு நிதிக்குழுவும் தெரிவுசெய்யப்பட்டது.

பெரிய புராணப் பரிசுப் போட்டிகுரிய ஒழுங்குகளும் கூட்டத்தில் செய்யப்பட்டன

திரு.மு. ஞானப்பிரகாசம் ''புகழ்ச் சோழர்'' என்னும் பொருள் பற்றி ஒரு சிறப்புச் சொற்பொழிவு நிகழ்த்தினர், செயலாளர் நன்றியுரைகூறினர்.

---

இப்பத்திரிகை 'ஈழநாடு, லிமிடெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேலை வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1968-ம் ஆண்டு ஜனவரி மாதம்18-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது

## கனடா தூதுவர் நெடுந்தீவுக்கு விஜயம்

யாழ்ப்பாணம், வியாழன்

இலங்கையிலுள்ள கனடா ஸ்தானிகர் திரு ஜே ரிம்மன் பொங்கலன்று நெடுந்தீவுக்கு கடற்படையினரின் மோட்டார் வள்ளத்தில் வந்து சேர்ந்து நெடுந்தீவுப் பகுதிக்கு விஜயம்செய்தார். நெடுந்தீவுக் காரியாதிகாரியும், இங்குள்ள சங்கங்களின் பிரதிநிதிகள், தலைவர்கள், குருமார்கள், பொது மக்கள் ஆகியோரும் துறைமுகத்தில் அவரை வரவேற்ருர்கள். காலை இங்கு வந்துசேர்ந்த ஸ்தானிகருக்கு நெடுந்தீவு வாடிவீட்டில் வைத்து ஒரு சிற்றுண்டி விருந்து அளிக்கப்பட்டது. சிற்றுண்டி முடிவில் நெடுந்தீவு கிழக்கு சனசமூகநிலையத்தின் தலைவரான திரு. என். எஸ் முருகேசு நெடுந்தீவிலுள்ள சரித்திரப்பிரசித்திபெற்ற இடங்களையும் பிரதான இடங்களையும் பார்வையிட்டார்.

---

## 23 புதிய ஆஸ்பத்திரி கட்டிடங்கள்

யாழ்ப்பாணம், வியா.

வட மாகாணத்தில்2வருடகாலத்தில் சுகாதாரப் பகுதியில் சிறிய ஆஸ்பத்திரிகள், மேலதிக வார்ட்டுகள் பிரசவ விடுதிகள், சிகிச்சை நிலையங்கள் உட்படட 23 புதிய கட்டிடங்கள் புதிதாகத் திறக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்படுகிறது.

இவற்றில் கடந்த வருடம் சுமார் 15 கட்டிடங்கள் வரை திறக்கப்பட்டன. கடந்த வருடத்தில் வட மாகாணத்தின் ஆஸ்பத்திரி விஸ்தரிப்புக் காரணமாக சிரேஷ்ட அதிகாரிகள், டாக்டர்கள் உட்பட சுமார் 16 புதிய உத்தியோகத்தர்கள் நியமிக்கப்பட்டுள்ளார்களென்றும், கடந்த வருடம் மட்டும் 7 அதிகாரிகள் நியமிக்கப்பட்டுள்ளனர் என்றும் கடந்த வருடம் 5 புதிய கட்டிடங்களுக்கு அடிக்கல் நாட்டப்பட்டுள்ளனவென்றும் சுகாதாரப் பகுதி தெரிவித்துள்ளது. [வி. நி.]

---

## மீஸோ முன்னணி தேசவிரோதஸ்தாபனம்

புதுடில்லி, ஜன. 17

மீஸோ மலைப்பகுதியில் செயல்படும் மீஸோ தேசிய முன்னணியை தேசவிரோத ஸ்தாபனமாக இந்திய அரசாங்கம் அறிவித்துள்ளது.

மீஸோ பிரதேசத்தில் தனி ராஜ்யம் ஒன்றை ஏற்படுத்தவும், அதற்காக படைதிரட்டி போராடவும் இந்த ஸ்தாபனம் முற்பட்டிருப்பதினுலேயே இந்திய அரசு இந்த முடிவு செய்திருக்கின்றது.

---

## தியாகராஜர் உற்சவம்

சென்னை, ஜன. 17

திருவையாற்றில் இன்று தியாகராஜர் உற்சவம் ஆரம்பமானது. 121-வது ஆராதனைவைபவத்துடனும் தியாகராஜரின் 200-வது பிறந்ததின விழாவுடனும் ஆரம்பமான இந்த உற்சவம் தொடர்ந்து 6 நாட்கள் நடைபெறும். பாரத உப ஜனதிபதி திரு. வி. வி. கிரி தொடக்கவுரை நிகழ்த்தினர் இசை நிகழ்ச்சிகள் இடம்பெற்றன.

---

கல்வி

அளவெட்டி அருணோதயக் கல்லூரியில் க. பொ. த. உயர்தர கலைப்பிரிவு[G.C.E. (A. L ) Arts] வகுப்புகள் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன சேரவிரும்புவோர் அதிபருடன் தொடர்பு கொள்ளவும். அதிபர், அருணோதயக் கல்லூரி அளவெட்டி. 1914

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org